


33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 33 பாலம்: 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2023

# ரொறொன்ரோ மாநகர முதல்வர் பதவி துறப்பு

ரொறொன்ரோவில் இருந்து வெளிவரும் “ரொறொன்ரோ ஸ்ரார்” ஊடகம் ரொறொன்ரோ நகரசபை முதல்வருக்கும் அவரின் கீழ்பணிபுரிந்த 31 வயது பெண்ணிற்கும் இடையேயான தொடர்பை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து சில மணித்தியாலங்களில் ரொறொன்ரோ நகரசபை முதல்வர் ஜோன் ரோறி (John Jory) தனது நகரசபை முதல்வர் பதவியைத் துறப்பதாக ஊடகங்களுக்கு 2023 பெப்பிரவரி 10ஆம் திகதி தெரிவித்தார்.

68 வயதான ஜோன் ரோறி 2022 ஒக்ரோபர் 24ஆம் திகதி நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ரொறொன்ரோ மாநகர சபையின் முதல்வராக மூன்றாம் முறை 62% மக்களின் ஆதரவைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மூன்றாம் முறை நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டு நான்கு மாதங்கள் கூட முடியாத நிலையில் பெப்பிரவரி 10ஆம் திகதி வெள்ளிக்கிமை இரவு ரொறொன்ரோ நகர மண்டபத்தில் கூட்டிய சிறப்பு ஊடகவியலாளர் நிகழ்வில் ஜோன் ரோறி தனது பதவி விலகலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றும்போது, ஊடக வியலாளர்களுக்கு மாலைநேர வணக்கத் தையும், தனது அழைப்பை ஏற்று வந்ததற்கு நன்றியையும் தெரிவித்து விட்டு, தான் ஒரு மிகவும் கஷ்டமான தனிப்பட்ட விடயத்தை ரொறொன்ரோ மக்களுக்குக் கூறப்போவதாகக் கூறினார். கடந்த பெரும் தொற்றுநோய்ப் பரவல் காலத்தில் ஒரு நகரமுதல்வராகவோ அல்லது ஒரு குடும்பத் தலைவனாகவோ தான் கடைப்பிடிக்க வேண்டிய தராதரத்தை இழந்து தனக்குக் கீழ் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்ணுடன் உறவை வளர்த்துக் கொண்டதாகவும், இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருவருடைய சம்மதத்துடனும் அந்த உறவை முடித்துக் கொண்டதாகவும் கூறினார்.




அப்பெண் தன்னுடன் உறவில் இருக்கும் காலத்திலேயே தனக்குக் கீழ் பணியாற்று வதில் இருந்து விலகி வேறு இடத்தில் பணியாற்றச் சென்று விட்டார். இந்த உறவை வளர்த்துக் கொள்ள அனுமதித் தது தனது தரப்பில் ஒரு பெரிய தவறு. 40 வருடங்களுக்கு மேல் அவரின் மனைவி யாக இருக்கும் பாபராவை விட்டு விலகிப் பெரும்தொற்றுநோய்ப் பரவல் காலத்தில் தனது பொறுப்புக்களை நிறைவேற்றப் பல நீண்ட காலங்கள் தனித்திருந்த நேரத்தில் இத்தவறு நடந்தது. இதன் விளைவாக நகரமுதல்வர் பதவியில் இருந்து தான் விலக முடிவு செய்துள்ளதாகவும், தான் தனது தவறுகளை உணர்ந்து மீண்டும் தனது குடும்பத்தின் நம்பிக்கையைக் கட்டி யெழுப்ப முயலப் போவதாகவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில், தான் அடுத்துவரும் நாட்களில் நகர முகாமையாளர் (City Manager), நகர எழுதுவினைஞர் (City Clerk) மற்றும் துணைநகர முதல்வர் ஜெனிபர் மெகெல்வி (Jennifer Mekelvie) ஆகியோருடன் இணைந்து தனது பொறுப்புக்களைக் கையளிக்கப் போவ தாகவும், தான் விரும்பும் ஒரு நகரத்தில் தான் விரும்பும் வேலையை விட்டு விலகிய தற்கு மிகவும் மனம் வருந்துவதாகவும், தனது மிக முக்கியமான உறவுகளைச் சரி செய்யத்தேவையான பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்த இதுவே சிறந்த வழி என, தான் நம்புவதாகவும் கூறினார்.

ரொறொன்ரோ மக்களிடமும், தனது செயல்களால் பாதிக்கப்பட்ட அனைவரிட மும், தனது பணியாட்கள், நகரசபையில் உள்ள சக ஊழியர்கள், நகரசபை ஊழியர்கள், நகரசபை உறுப்பினர்கள், தான் மிகவும் மதிப்பளித்து மரியாதை கொடுக்கும் பொதுச்சேவைப் பணியாட்கள் அனைவரிடமும் எந்தவித நிபந்தனை களும் இல்லாமல் தான் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும் ஜோன் ரோறி தெரிவித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக தனது மனைவி பாபராவிடமும், மற்றவர் களை விட மிகவும் ஏமாற்றிய தனது குடும்பத்தாரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். தான் உட்பட, தனது செயல்களால் பாதிக்கப் பட்ட அனைவருடைய தனியுரிமை மதிக்கப்படும் என்றும், குறிப்பாக தனது மனைவி தனது குடும்பத்தாரின் தனி யுரிமையை ஊடகவியலாளர் மதிப்பர் என நம்புவதாகவும் கூறினார்.

பணியாட்களின் நெறிமுறைகளை விசாரணை செய்யும் ஆணையாளருக்கு (Integrity Comissioner) தனது உறவு பற்றித் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் அதை விசாரணை செய்வார் எனவும் கூறி, தன்னை நம்பியதற்காக ரொறொன்ரோ மக்களுக்கு நன்றியைத் தெரிவித்த ஜோன்

தொடர்ச்சி 04 பக்கம்

































MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136



# For All Your Private Mortgage Needs

8T Capital
Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVANANTHAM**
Business Development Manager
Mobile: (647) 670-0320
Email: ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ரோறி, தான் ரொறொன்ரோ நகரத்திற்கு சில நன்மைகளைச் செய்ததாகவும் கூறினார். வழமையாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குத் தான் பதிலளிப்பவன். ஆனால், இன்று தனது அறிக்கையை வெளியிடுவதுடன் இச்சிறப்பு ஊடகவியலாளர் நிகழ்வை நன்றி கூறி நிறைவு செய்வதாகக் கூறினார்.

“ரொறென்ரோ ஸ்ரார்” ஊடகவியலாளரின் கேள்விகளுக்குப் பெப்பிரவரி 10ஆம் திகதி காலையே ஜோன் ரோறியின் சட்டத்தரணியான Peter A. Downward ஜோன் ரோறியின் கீழ் பணிபுரிந்த பெண்ணுடனான அவரின் பல மாத காலத்தொடர்பை உறுதி செய்து கடிதம் அனுப்பியிருந்தார். பல உறுதிப்படுத்திய தகவல்கள் “ரொறொன்ரோ ஸ்ரார்” ஊடகத்திற்கு ஜோன் ரோறியின் கீழ் பணிபுரிந்த 31 வயது பெண்ணை அடையாளப்படுத்தியிருந்தாலும் அவ் ஊடகம் அவரைப் பற்றிய மேலதிக தகவல் எதையும் வெளியிடவில்லை. ஆனால், “ரொறொன்ரோ ஸ்ரார்” அவருடன் பலமுறை தொடர்பு கொண்டு அவர் பக்கத் தகவல்களைப் பெற முயன்றதாகவும், அவர் ஊடகத்துடன் தொடர்பு கொள்ள மறுத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளது.

ரொறொன்ரோ ஸ்ரார், ரொறொன்ரோ நகரசபையிடம் இருந்து பெற்ற அறிக்கைகள் மற்றும் செலவுக் கணக்குகள் பற்றிய விபரங்களில் இருந்தும் சில தகவல்களை வெளியிட்டிருக்கிறது.

2018ஆம் ஆண்டிற்கும் 2020ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வர்த்தகப் பயணங்கள் (Trade Missions) மற்றும் நிர்வாகப் பயணங்கள் (Governance Trips) போன்றவற்றில் ஜோன் ரோறியுடன் Los Angeles, Ottawa, Austin, Texas, NewYork City மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவர்களில் இந்தப் பெண் ஊழியரும் இருந்தார். இப்பெண் 2021ஆம் ஆண்டு ஆரம்ப காலத்திலேயே ரொறொன்ரோ நகரசபையில் பணியாற்றுவதில் இருந்து விலகி வேறு இடத்தில் பணியாற்றச் சென்றார். இப்பெண் ஜோன் ரோறியின் மூன்றாவது நகரசபை முதல்வருக்கான தேர்தல் பிரசாரங்களின்போது அவருடன் பங்கு பற்றியிருந்தார் எனவும் ஊடகங்கள்



Jennifer McKelvie with John Tory in 2019

செய்தி வெளியிட்டிருந்தன. அவ் ஊடகங்கள் ஜோன் ரோறியின் முதலாவது நகரசபைத் தேர்தலின் வெற்றியின்போது பங்குபற்றிய அவரது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அவரது மூன்றாவது நகரசபைத் தேர்தல் வெற்றியின்போது பங்கு பற்றாததையும் சுட்டிக் காட்டியுள்ளன.

John Howard Tory 1954 மே 28ஆம் திகதி ரொறொன்ரோவில் பிறந்தார். இவருடைய தந்தையார் John A. Jory ஒரு பிரபல தொழிலதிபர். தாயார் Elizabeth. ஜோன் ரோறியின் தந்தை வழிப்பேரன் John S.D. Tory, "Sun Life of Canada" நிறுவனத்தை ஆரம்பித்தவர்.

ஜோன் ரோறி ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தின் Trinity Collegeஇல் இளம் கலைமானிப் பட்டத்தை அரசியல் விஞ்ஞானத்தில் பெற்றவர். அத்துடன் யோர்க் பல்கலைக்கழகத்தின் Osgoode Hallஇல் சட்டத்துறையில் இளம்கலை மானிப் பட்டம் பெற்றவர். இவர் ஆரம்ப காலத்தில் ஊடகவியலாளராகத் தொழில் புரிந்தார். பின்னர் 2004ஆம் ஆண்டில் இருந்து 2009ஆம் ஆண்டுவரை ஒன்ராறியோ பழமைவாதக்கட்சியின் தலைவராகப் பதவி வகித்தார். சிறிது காலம் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார்.

2014இல் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ரொறொன்ரோ மாநகரசபையின் முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டு நகர முதல்வராக முதன்முறை தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 2018ஆம் ஆண்டில் மீண்டும் போட்டியிட்டு ரொறொன்ரோ மாநகரசபையின் முதல்வராக இரண்டாம் முறையும் தெரிவு செய்யப்பட்டார். அவர் மூன்றாம் முறை நகர முதல்வராக 2022இல் நடைபெற்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டார்.

ஜோன் ரோறி 1978ஆம் ஆண்டு மனைகள் அமைப்பவரும் மற்றும் மனைகளைப் புனரமைப்புச் செய்பவருமான Barbara Hackettஐத் திருமணம் செய்தார். இவர்கள் இருவரும் யோர்க் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகச் சட்டம் பயின்றவர்கள். இவர்கள் இருவருக்கும் நான்கு பிள்ளைகளும், ஐந்து பேரப்பிள்ளைகளும் இருக்கின்றனர்.

ஜோன் ரோறி, நகரமுதல்வர் பதவியில் இருந்து தான் விலகுவதாகத் தெரிவித்தாலும், அவர் அதை உத்தியோகபூர்வமாக நகரசபைக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் ரொறொன்ரோ நகரசபையின் வரவு



செலவுக் கூட்டம் பெப்பிரவரி 15ஆம் திகதி நடைபெற்ற பின்னரே தனது உத்தியோக பூர்வமான பதவி விலகலை கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு அவர் உத்தியோகபூர்வமாக நகர சபைக்குத் தெரிவித்த நாளில் இருந்து 60 நாட்களுக்குள் நகரசபையால் இடைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும்.

ஜோன் ரோறி தனது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக நகரசபைக்குத் தெரிவித்தவுடன் தற்போது துணை நகர முதல்வராக இருக்கும் Scarborough நகரசபை உறுப்பினரான Jennifer Mckelvie பதில் நகர முதல்வராகப் (Acting Mayor) பதவி ஏற்பார்.

2018ஆம் ஆண்டில் இருந்தே ரொறொன்ரோ நகரசபையின் 25ஆவது வட்டாரமான Scarborough - Rouge Parkஇல் இருந்து தெரிவு செய்யப்பட்ட நகரசபை உறுப்பினரான Jennifer McKelvie 2022 நொவம்பரில் இருந்து துணை நகரமுதல்வராகப் பதவி வகிக்கிறார்.

1977ஆம் ஆண்டில் East Yorkஇல் பிறந்த Jennifer McKelvie ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச் மொழிகளில் சரளமாகப் பேசக் கூடியவர். இவர் சுற்றுப்புறச் சூழலியலில் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் இளம் விஞ்ஞானமானிப்பட்டம் பெற்றவர். பின்னர் தனது M.Sc. மற்றும் Ph.D பட்டங்களையும் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் பெற்றவர். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

# தினமுமே மகிழ்ந்திடலாம்



அளவுடனே உணவுண்டால்
ஆரோக்கியம் அமைந்துவிடும்
அளவுமீறி ஆகிவிடின்
அனைத்துமே அழிந்துவிடும்!

வாழ்வதற்கும் பணந்தேவை
பணம்மட்டும் வாழ்வல்ல
பணமெண்ணி வாழ்ந்துவிடின்
பாழாகும் வாழ்க்கையது!

படிக்கவேணும் வாழ்க்கையிலே
பலவற்றை யாவருமே
பட்டம்மட்டும் வாழ்வல்ல
பண்பும்சேர்ந்து வரவேணும்!

கோவிலுக்குப் போகவேணும்
குறைசொல்லல் தவிர்க்கவேணும்
பாவம்பற்றி எண்ணாமல்
பலருக்கும் உதவவேணும்!

மூத்தோரை வாழ்க்கையிலே
முதலிடத்தில் வைக்கவேணும்
ஆத்திரத்தை அடக்கிவிடின்
அமைந்துவிடும் நல்லவாழ்வு!


பொய்யென்னும் வார்த்தையினை
பொசுக்கிவிட்டு வாழவேணும்
மெய்யாக வாழ்ந்துவிடின்
மேதினியே மகிழ்ந்துவிடும்!

முன்னோர்கள் மொழிந்தவற்றை
பொன்னாகக் கொள்ளவேணும்
எம்மாலே இயன்றவரை
எல்லோர்க்கும் உதவவேணும்!

யார்மனதும் நோகாமல்
நாமிருந்தால் நலன்பயக்கும்
ஊருலகம் பழிப்பவற்றை
ஒதுக்கிவிட்டால் உயர்வுவரும்!

அப்பாவை அம்மாவை
அழவிடுதல் முறையல்ல
அவராசி கிடைப்பதுவே
அனைவருக்கும் வாழ்வாகும்!

மனம்மகிழ வாழ்வதற்கு
வழிகள்பல இருக்கிறது
தேர்ந்தெடுத்து வாழுங்கள்
தினமுமே மகிழ்ந்திடலாம்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# 33 வருடங்களாக அஞ்ஞாத வாசம் செய்த தமிழர்




இராமாயணத்தில் இராமபிரான் 14 ஆண்டுகள் வனவாசம் இருந்ததாகச் சொன்ன போது பக்தர்கள் கதிகலங்கிப் போனார்கள். இக்கதை பழைய வரலாற்றில் இடம் பெற்றிருந்ததால் அந்த சம்பவம் முக்கியம் பெற்றிருந்தது. ஆனால் அதைவிட அதிககாலம் அதாவது 33 வருடங்கள் வடஇலங்கைத் தமிழ் மக்கள் அஞ்ஞாத வாசம் இருந்ததைக் கேள்விப்பட்ட போது யூரியூப் தொலைக் காட்சி நண்பரான தணூரன் என்பவர் கண்கள் கலங்கி நின்றதைக் காண முடிந்தது.

'முதன் முதலாக இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்திருக்கின்றேன், காரணம் நான் அப்போது பிறந்திருக்கவில்லை' என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இது இராமாயண காலத்தில் நடக்கவில்லை, சென்ற வாரம் இலங்கைத் தீவின் வட பகுதியில் உள்ள, தமிழர் பரம்பரையாக வாழ்ந்த காங்கேசந்துறையில் நடந்ததொரு சம்பவமாகும். இதைப் பார்த்த இன்னுமொரு நண்பர் சந்துரு என்ற ஊடகவியலாளர் 'புதிய பூமி புதிய வானம்' என்று கைகளைத்தூக்கி மகிழ்ச்சியில் பாடினார். இது அவருக்குப் புதிய பூமியாக இருக்கலாம், ஆனால் இது எமக்கு எங்கள் மூதாதையர் வாழ்ந்த 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே - அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இம் மண்ணே!

யுத்தம் காரணமான வடபகுதியில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்திருந்தார்கள். காங்கேசந்துறையை அதிபாதுகாப்பு வலயமாக இராணுவம் பிரகடனப் படுத்தியதால் 1990ஆம் ஆண்டு பரம்பரையாக அங்கு வாழ்ந்த மக்கள் சொந்த மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். எங்கே செல்வது என்று தெரியாமல், உறவுகள் எல்லாம் வலி சுமந்த நெஞ்சோடு திக்குத் திக்காய்ப் பிரிந்து விட்டார்கள். மீண்டும் அந்த மண்ணில் காலடி எடுத்து வைக்க இப்போதுதான் சிலருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. உடைந்து சிதைந்து போயிருந்த தங்கள் வீடுகளை, 33 வருடங்களின் பின் பார்த்த மக்கள் சில நிமிடம் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தனர். ஆனாலும் சொந்த மண்ணில் மீண்டும் காலடி வைத்ததில் தாங்கள் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டனர்.

கங்கேசந்துறையில் சுமார் 108 ஏக்கர் நிலப்பரப்பு மட்டும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டது. தனிப்பட்ட மக்களுக்குச் சொந்தமான விடுவிக்கப்பட்ட நிலத்தில் 80 ஏக்கர் நிலம் இராணுவத்திடம் இருந்தும், 28 ஏக்கர் நிலம் கடற்படையிடம் இருந்தும் விடுவிக்கப்பட்டன. தற்போது விடுவிக்கப்பட்ட



பகுதிகளில் முக்கியமாக 1959 ஆம் ஆண்டு கட்டப்பட்ட காங்கேசந்துறை பட்டணசபையைச் (பிரதேசசபை) சூழ்ந்த பகுதிகளும், அதாவது பழைய துறைமுகம் இருந்த கலங்கரைவிளக்கம் தொடங்கி மேற்கே புதிய துறைமுகம் வரை விடுவிக்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி மாளிகை இருக்கும் இடம், குறிப்பாகச் சடையம்மா மடத்தடி இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதேபோல நடேஸ்வராக் கல்லூரிவீதியில் உள்ள நரசிம்மவைரவர் கோயிலைச் சூழ்ந்த தையீட்டியின் சில பகுதிகளும் விடுவிக்கப்பட்ட இடங்களில் அடங்கும். எங்கள் வீடுகள் இருந்த பகுதியும், நடேஸ்வராக்கல்லூரியும் மக்களின் விடா முயற்சியால் ஏற்கனவே சில வருடங்களுக்குமுன் விடுவிக்கப்பட்டிருந்தன.

நடேஸ்வராக் கல்லூரி வீதியில் கல்லூரியோடு இணைந்த, கிழக்குப் பக்கத்தில் தொடர்வண்டிப் பாதைக்கு அருகே சிறிய பகுதி இன்னமும் 515ஆவது இராணுவ பிரிவிடம் இருக்கின்றது. அதையும் விட்டுக் கொடுத்தால், தையீட்டிப் பகுதிகளில் குடியிருக்கும் மாணவர்கள் கல்லூரிவீதி வழியாக இலகுவாகக் கல்லூரிக்கு வந்து செல்ல முடியும், இல்லாவிட்டால் நீண்ட தூரம் சுற்றி வரவேண்டியிருக்கும். தொடர்வண்டி நிலையத்திற்கு அருகே இருந்த ரோமன் கத்தோலிக்க பாடசாலையும் தற்போது விடுவிக்கப் பட்டிருக்கின்றது. சுமார் 197 குடும்பங்களின் நிலங்களில் மீள்குடியேற்றம் நடைபெறுவதால், இனிவரும் காலங்களில் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கச் சந்தர்ப்பம் உண்டு.

தரைப்பாதை, தொடர்வண்டிப் பாதை, கடற்பாதை மற்றும் விமானப்பாதை ஆகிய நான்குவழிப் பாதைகளைக் கொண்ட நகரமாகக் காங்கேசந்துறை இருந்ததால், ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான நகரமாக இருந்தது. இயற்கை தந்த வெண்மணற் பரப்பைக் கொண்ட காங்கேசந்துறை கடற்கரையும், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் கலங்கரைவிளக்கமும், போத்துகேயரைக் கோட்டைகட்ட விடாமல் தடுத்து அத்திவாரச் சுவரோடு நிறுத்திய மக்களின் வீரவரலாறும், அதன் அருகே பழைய துறைமுகமும் அந்த நகருக்கு அழகு சேர்த்தன. விமானத்தையோ, கப்பல்களையோ அல்லது தொடர் வண்டியையோ அருகே சென்று பார்க்க விரும்பியவர்களின் ஆசைகளை நிறைவேற்றிய நகரமாக அன்று காங்கேசந்துறை இருந்தது. 1970களில் சுமார் 3000 மேற்பட்ட பணியாளர்கள் அங்கிருந்த சீமெந்துத் தொழிற்சாலையில் பணி புரிந்தனர்.



குரு வீதியில் உள்ள எங்கள் வீடு தரை மட்டம் ஆக்கப்பட்டிருந்தாலும், அருகே உள்ள நடேஸ்வராக் கல்லூரி நான் ஆரம்ப கல்விகற்ற பாடசாலை என்பதாலும், எனது தந்தை நடேஸ்வராக் கல்லூர் அதிபராகவும், பட்டணசபை முதல்வராகவும் இருந்ததாலும் இந்த இடங்கள் விடுவிக்கப் பட்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் இதையெல்லாம் பார்த்து மகிழ எனது பெற்றோர் தான் இப்போது உயிருடன் இல்லை. எனக்கு மட்டுமல்ல, பலரும் சொந்தங்களை இந்த யுத்தத்தில் இழந்து விட்டார்கள். எமது காலத்தில் இனமத வேறுபாடின்றி எல்லா இனத்தவரையும், மதத்தவரையும் அரவணைத்த நகரமாகக் காங்கேசந்துறை இருந்தது. பலவேறு இனத்தவர்களும் தொழில் நிமித்தம் அங்கு வந்து ஒற்றுமையாக வாடகை வீடுகளில் தங்கியிருந்தனர். அவர்களது பிள்ளைகள் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றனர். எமது காலத்தில் சுமார் 1200 பிள்ளை கள்வரை கல்வி கற்ற இடத்தில் 160 பிள்ளைகள்தன் இப்போது படிக்கின்றர்.

இப்பிலிப்பிலி என்று ஒருவகை மரம் பற்றையாக எல்லா இடமும் காணப்பட்டது. படையினர் தங்கள் பாதுகாப்பிற்காக யுத்தகாலத்தில் அதன் விதைகளை வானத்தில் இருந்து தூவியிருந்தனர். வட பகுதியில் எல்லா இடமும் இப்போது அந்த மரம்தான் காணப்படுகின்றது. விடுவிக்கப்பட்ட இடங்களில் இராணுவம் தங்கியிருந்த வீடுகள் மட்டும் நல்ல நிலையில் இருக்கின்றன. ஏனைய வீடுகள் இடிந்து அழிந்து போனவையாகவும், வளவுகள் முழுதும் பற்றைகள் வளர்ந்து பாதுகாப்பு அற்றவையாக இருக்கின்றன. தெருநாய்களைக் கூட்டம் கூட்டமாகக் காணமுடிந்தது. அவை இரவிலே படையினருக்குக் காவல் நாய்களாக மட்டுமல்ல, இராணுவ முகாங்களின் சாப்பாட்டையும் இதுவரை காலமும் நம்பியிருந்தன.

கோயிற்கடவை என்று அழைக்கப்பட்ட இந்த சுற்றுவட்டாரத்தில் சிறிதும் பெரிதுமாய் 67 இந்துக் கோயில்கள் இருந்தன. தையீட்டி நரசிம்ம வயிரவர் கோயிலைப் பௌத்த கோயிலாக மாற்ற முயற்சிகள் நடந்திருக்கின்றன. சூலம் உடைக்கப்பட்ட நிலையில், மூலவர் அகற்றப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது. அங்கிருந்த அரச மரத்தில் பௌத்த கொடிகள் கட்டப்பட்டிருந்தன. சுவர்களில் புத்தரின் படங்கள் வரையப்பட்டிருந்தன. வாசலில் பொலநறுவை சோழர்காலத்து சந்திர வட்டக்கல் அடையாளங்கள் போல, பௌத்த வரலாற்றைச் சொல்லும் அரை வட்டக்கல் ஒன்றையும் பதித்திருக்கிறார்கள். சீமெந்துத் தொழிற்சாலைக்கு முன்னால் இருந்த குமாரகோயில் வளாகத்தில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. கைவிடப்பட்ட வீட்டுச் சுவர்களில் பெரிய அளவில் பெண்களின் ஆபாசப் படங்கள் வரையப்பட்டிருந்ததையும் சில இடங்களில் அவதானிக்க முடிந்தது.

எங்கள் பாரம்பரிய நிலங்களைத் திரும்பப் பெறுவதற்கு யார்யாரிடமோ எல்லாம் மண்டியிட்டுக் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இங்கே கிணறுகளை வைத்துத்தான் காணிகளை அடையாளப்படுத்த முடிகின்றது. சில கிணறுகள் தொலைக்கப்பட்டு விட்டன. 33 வருடங்கள் வலிசுமந்த நெஞ்சோடு உறவுகளைப் பிரிந்து வாழ்ந்தது போதும், இனியாவது எல்லைச் சண்டை, வேலிச்சண்டைகளைச் சுமூக

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)

Sam Surendran
Mortgage Broker
Licence # M16002312
647-922-5704
Mortgage Alliance
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

## நாமும் நமது இல்லமும் 625

# 2023இல் ஆதன எதிர்வு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடாவில் இருக்கும் நம்பிக்கைக்குரிய புள்ளி விபரங்களை வெளியிடும் ஆராய்ச்சி நிறுவனம் IPOSஇன் வருடாந்த கணிப்பீடு வெளிவந்துள்ளது. 2023ஆம் ஆண்டில் முதல் ஆறு (6) மாதம் வியாபாரத்தில் பெரிய மாற்றம் ஏற்படாது. அதிக வட்டி வீதம் ஆதனம் வாங்குவோரை தாமதப்படுத்துவதனைக்

| சனத்தொகை | 2022 | 2023* |
|---|---|---|
| ரொறொன்ரோ | 2.8M | 3.5M |
| GTA | 6.3M | 8.0M |
| ஒன்ராறியோ | 15M | 17M |
| கனடா | 39.3M | 41M |

* prediction

காணலாம். இரண்டாவது ஆறு மாதத்தில் நீண்ட கால (5 வருடம்) அடமானக் கடன் வட்டி வீதம் குறையலாம். அதனால், வியாபாரம் அதிகரிக்கலாம். 2022ஆம் ஆண்டில் 74,140 ஆதனங்கள் மட்டுமே கைமாறின. இந்தப் பெறுமதி 2021ஐவிட 38.2% குறைவாகக் காணப்பட்டது. 2021ஆம் ஆண்டில் மொத்தமாக விற்கப்பட்ட ஆதனத்தின் எண்ணிக்கை 121,639. 2022இன் சராசரி விலை $1,189,850. 2021ஐவிட 8.6% அதிகமானது. (2021 $1,095,333).

2023இல் ஆதன வியாபாரம் 2022ஆம் ஆண்டைவிட அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் முதல் தடவை வாங்குவோர் அதிகமானவர்கள் சந்தைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. இன்றைய காலத்தில் போதியளவு ஆதனம் வாங்குபவர்கள் சந்தையில் இருப்பினும், அதற்கேற்ப போதியளவு ஆதனங்கள் சந்தையில் இல்லாமல் இருப்பதை அவதானிக்கலாம். இதுவரை, மாதாந்த கொடுப்பனவின் நெருக்கடியில் (stress sale) ஒருவரும் ஆதனத்தை விற்கவில்லை. இந்நிலைமை தொடருமா? என்பது இதுவரை தெரிய வில்லை. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் வியாபாரத்தினதும் ஆதன விலையினதும் நிலைமை மாறலாம். எனினும் ஆதன விலை 2022ஐவிடக் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய நிலையில் தொழில் தேடுபவர் களின் எண்ணிக்கையும், பணவீக்கமும் தொடர்ச்சியாகக் குறைகின்றது. இது ஒரு நல்ல செய்தி. எனினும், ஆதன முதலீட்டாளர்கள் (investors) ஆதன முதலீட்டில் முதலிட தயங்குகின்றனர். இதனால் ஆதன வியாபாரம் முதல் தடவையாக வாங்குபவர்களிலேயே தங்கியுள்ளது.

எனினும், புதிதாக நிர்மாணமாக இருக்கும் ஆதனங்கள் கையில் கிடைக்கும் காலம் (Closing Date) 5 அல்லது 6 வருடங்கள் பிந்தியுள்ளது. இதனால் இவ்விதமான கட்டிடத் தொகுதியில் (brand new condominium with longer closing) முதலீட்டாளர்கள் முதலிடுவதனையும் காணலாம்.

அநேகமான முதல் தடவை வாங்குபவர் களின் ஆரம்ப முதலீடு கணிசமாக இருப்பதாகத் தெரிய வருகின்றது. இதற்கு தமது சேமிப்பும் வசதியான பெற்றோர்கள் மற்றும் தாத்தா, பாட்டியின் பண உதவி யும் காரணமாக உள்ளது. வசதியான பெற்றோர் பிள்ளைகளிற்கு அதிகளவு பண உதவி செய்வதனைக் காணக் கூடியதாக உள்ளது.

மத்திய அரசின் புதியவர்களின் கனடிய வருகை மீதான கொள்கை, ஆதன வாடகையை ஊக்குவிக்கின்றது. தகுந்த ஆதனத்தை வாடகைக்குக் கண்டுபிடிப்பது இலகுவல்ல. இதனை நிவர்த்திக்க அரசுகள் அதிக கவனம் எடுக்கப்பட்ட போதும், வாடகை நிலைமை இறுக்க மாகவே காணப்படுகின்றது. இதற்கு உதாரணமாக, 'விளம்பரம்' பத்திரிகையில் வரும் (www. vlambaram.com) Basement வாடகை, மிகவும் பிரபலமாக (Popular) இருப்பதனைக் காணலாம்.

இந்தியா போன்ற நாடுகளில் இருந்தும், இங்கு குடிவர இருப்பவர்கள் தமக்கு தங்குவதற்கு இடம் தேவைக்காக தம்மை பலர் அனுகுவதாக தெரியப்படுத்து கின்றனர். அத்துடன் அநேகமான வீட்டு உரிமையாளர்களின் அறைகள், கீழ் அறைகள் (Basement), வீடுகள் உடனடியாக வாடகைக்கு கொடுக்கப்பட்டு விடுகின்றன என்பதனையும் காணலாம்.

வெளிநாட்டவர்களின் தொடர்ச்சியான வருகை, வாடகையை நெருக்கடியிலேயே



வைத்திருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆதன வியாபாரம் என்பது நீண்ட கால முதலீடு, ஒருவர் தாம் இருப்பதற்காக வாங்குவதாயின், இவ்வாறான ஏற்ற இறக்கங்கள் பெரிய பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. ஆதனத்தை வாங்கும் போது, மாதாந்த கொடுப்பனவை கணக்கில் கொண்டு அதற்கேற்ப ஆதனத்தை வாங்கினால், முடிவு சிறப்பாகவே இருக்கும். அத்துடன் முதலீட்டை நோக்கமாகக் கொண்டு வாங்குவோர், தகுந்த ஆதன முகவரின் சிறப்பான ஆலோசனையை பெற்று அதற்கேற்ப செயல்படுவது சிறப்பாகும்.

எப்பொழுதும் ஆதன முதலீட்டிற்கு ஆதனம் அமைந்திருக்கும் பகுதி சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதனை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கோவிட்-19 கனடிய மக்களின் வாழ்வில் மட்டுமல்ல உலகளாவிய மக்களின் வாழ்க்கை முறையை முற்றாக மாற்றி விட்டது என்பது கவனிக்கத்தக்கது. மாற்றம் என்பது எப்பொழுதும் மாறாததே. எனவே எமது சிந்தனையும் செயல்பாடும் அதற்கேற்ப இருப்பதுவே சிறப்பு.

## 33 வருட...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

மாகத் தீர்த்து ஒன்றுபட்டுச் செயற்படு வோம். விழுந்தாலும் மீண்டும் எழுந்து நிற்போம், எங்கள் அடையாளங்களைக் கட்டி எழுப்புவோம் என்பதைச் செய்கை யில் காட்டுவோம். எமது மிகுதி நிலங் களையும் மீட்டெடுப்போம். மக்களும், காலமும்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.



நரசிம்ம வயிரவர் கோயில்

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)




நாளைய வாழ்க்கையை சிறப்பாக மாற்றுவது இன்றைய எண்ணங்களும் செயல்களும் தான்.

# விழுமியங்களைப் பின்பற்றாத வாழ்வு துன்பமே!




விழுமியம் என்பது தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றை போஷிக்கின்ற, வளப்படுத்துகின்ற, அர்த்தமுள்ளதாக்குகின்ற மனித குணப்பண்பாகும். உலகம் முழுக்க அறநெறிகள், நீதிகள், ஆசாரங்கள் உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக சுட்டக்கூடிய சொல்லே விழுமியமாகும். மனிதனது நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படும். சோக்கிரட்டீஸ் என்ற மெய்யியலாளர் "விழுமியங்களை ஒழுக்கத்துடன் இணைத்து அதுவே அறிவு என்றார். அதாவது அறிவே ஒழுக்கம்" என்றார். சுருங்கக் கூறின், நல்ல பழக்கவழக்கங்களே விழுமியமாகும். விழுமியம் என்ற சொல்லில் அன்பு, தைரியம், உண்மை, சாந்தம், சமாதானம், அறிவு, காருண்யம், கெட்டித்தனம், சுயகற்றல், அகிம்சை, ஒழுங்குமுறை, சமத்துவம், இன்சொல், நேர்மை, சினேகபூர்வம், தர்மம், வாய்மை, இரக்கம், சத்தியம், கருணை, மனிதநேயம் ஆகிய நடத்தைகளும், குணங்களும் அடங்கியுள்ளன. விழுமியம் என்பதுள் எமது முன்னோரின் உச்ச அனுபவங்களினால் செம்மைப்படுத்தப்பட்ட நம்பிக்கைகள், மரபுகள், சிறந்த பழக்கவழக்கங்கள், ஒழுகலாறு என்பவை அடங்கியுள்ளன.

விழுமியங்களை நேர்மையுடன் பயன்படுத்துவதே அவற்றின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. விழுமியங்களை இருவகையாக வகுக்கலாம். தனிமனித விழுமியங்கள், பண்பாட்டு விழுமியங்கள். தனிமனித விழுமியங்கள் தனிமனிதருடைய வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டவை. அவை ஒட்டுமொத்த சமுதாயத்தின் ஒழுங்கமைவுக்கு அத்தியாவசியமாக இருக்க வேண்டியதில்லை. ஒரு சமூகத்தில் பொதுவாக உள்ள விழுமியங்கள் பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். மனிதர் சேர்ந்து வாழ்வதற்கு எந்தெந்த விழுமியங்கள் சிறப்பாகத் தேவைப்படுகின்றனவோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனலாம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்குள்ளும் தனிமனித விழுமியங்கள் இருக்க வேண்டும். குழந்தைப் பருவத்தில் கற்ற விழுமியமானது அக்குழந்தை பாடசாலையிலும் விழுமியக் கல்வியை தொடர்வதற்கு உதவிபுரிகின்றது. பொதுவாக விழுமியங்கள் உயர்ந்த சமூக உருவாக்கத்துக்கு மிகவும் அவசியம். ஆனால் தற்பொழுது பெரும்பாலான பெற்றோர் பணத்துக்காகவே திரிகிறனர். தன் பிள்ளைகள் பெரிய



பதவிகளைப் பெற்று சிறப்பாகப் பணம் சம்பாதிப்பதையே விரும்புகின்றனர். பெற்றோர் விழுமியங்களை போதிப்பதில், பிள்ளைகள் பின்பற்றுகின்றனரா என்பதில் அக்கறை செலுத்துவது குறைவு. இதனால் நல்ல மனித வளங்களை பெரிதும் காண முடியாதுள்ளது. இவை இல்லையாயின் செத்துப்போன சமூகத்தையே காணலாம்.

எமது அன்றாட வாழ்வில் நாம் விழுமியங்களைக் கைக்கொண்டு மகிழ்வான வாழ்வை வாழவேண்டும். தனிமனித விழுமியங்கள் சீராக அமையின் சமூக விழுமியங்கள் சீராக அமையும். மனிதர் ஒருங்கிணைந்து வாழ்வதற்கும், சமூகம் நிலைத்து நிற்பதற்கும் சமூக விழுமியங்கள் வழிகாட்டுகின்றன. இவற்றை சிறந்த முறையில் பின்பற்றுவதன் மூலம் மனித வாழ்வின் துன்பியல் நிலையிலிருந்து விடுபட முடியும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் ஆகிய பழமொழிகளுக்கு அமைவாக குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்து விளங்க நல்ல விழுமியப் பண்புகளை இளம் வயதிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும். கற்க வேண்டும். புராணங்கள், இதிகாசங்கள், பழமொழிகள், நீதிக்கதைகள், சமய நூல்கள், என்பவற்றிலும் நல்ல விழுமியப் பண்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மேலும் பெற்றோர், பண்புள்ள நண்பர்கள், சமயத் தலைவர்கள், அதிபர், ஆசிரியர்கள் மூலமாகவும் சிறந்த விழுமியப் பண்புகள் விதைக்கப்படுகின்றன. ஆனால் அவற்றை முளையிலேயே கிள்ளிவிடுவோரும் உள்ளனர். இதனால் இவர்களது வாழ்வு துன்பமாகவே ஓடுகின்றது.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

ஆயிரக்கணக்கான தாதியர்கள், மருத்துவர்கள் மற்றும் தனிநபர் பராமரிப்புப் பணியாளர்களை ஒன்ராறியோ தற்போது பணிக்கமர்த்தி வருகின்றது.

இந்தப் பராமரிப்புடன் இணைவதற்கு நாம் உங்களுக்கு உதவும் அனைத்து வழிகளையும் ontario.ca/YourHealth இல் பார்வையிடவும்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# நானிலம் போற்றும் நட்பு - 15



- அகணி -
authorakani@gmail.com

"அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்" (அதிகாரம் நட்பாராய்தல், குறள் 795) என்ற குறளிற்கு "நன்மை இல்லாத சொற்களைக் கண்டபோது வருந்தும் படியாக இடித்துச் சொல்லி, உலக நடையை அறிய வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டும்" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"குற்றம் செய்யும்போது வருந்தும்படி அறிவுரை சொல்லிக் கண்டித்துப் பேசுபவராகவும், உலக நடைமுறையை அறிய வல்லவராகவும் இருப்பவர் நட்பை ஆராய்ந்து கொள்ளவேண்டும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"தீமை செய்வதை விலக்கவும், உலக நடையை அறிவிக்கவும் வல்லவரின் நட்பையே தேடிக்கொள்ள வேண்டும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

குற்றம் செய்யும் பொழுது நண்பரின் நன்மை கருதி அவருக்கு எடுத்துக் கூறி நல்ல அறிவுரை வழங்கும் உண்மை நண்பனின் நட்பை ஆராய்ந்து ஏற்று நல்வழிப்படவேண்டும் என்று இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

சங்கம் மருவிய காலத்தில் பல சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் நட்பு பற்றிக் கூறும் கருத்துக்களையும் ஆராய்வோம். நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 24 கூடா நட்பு அதிகாரம் இல் நாலடியார் பாடல் 238 இனைக் கவனிப்போம்.

238."முட்டுற்ற போழ்தின் முடுகியென் ஆருயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனேல் - நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வழிச் செல்க
நெடுமொழி வையம் நக."

இப்பாடலுக்கு ஊ. புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"முட்டு உற்ற போழ்தின் - (என்னுடைய நண்பன்) சங்கடத்தை அடைந்தபோது, முடுகி - துரிதப்பட்டு, என் ஆர் உயிரை - என்னுடைய அருமையான பிராணனை, நட்டான் ஒருவன் கை நீட்டேனேல் - சிநேகிதனாகிய ஒருவன் கையிற் கொடாமற் போவேனேயானால், நட்டான் - சிநேகிதனுடைய, கடிமனை - காவலுள்ள அல்லது கலியாணஞ் செய்த மனையாளை, கட்டு அழித்தான் - கற்பழித்தபாவி, செல்வுழி - போமிடத்தில், நெடு மொழி வையம் - மிகுந்த பேர்பெற்ற பூமியிலுள்ளோர், நக-சிரிக்கும்படி, செல்க - (நான்) போகக் கடவேன்"
"நண்பனுக்குச் சங்கடநேர்ந்தபோது தன் உயிரைக் கொடுத்தாகிலுங் காப்பாற்றாத வன் நட்டான் மனையாளைக் கற்பழித்தவன் செல்லு நரகத்திற் செல்வான் என்றபடி."

"முட்டு-முதனிலைத் தொழிற்பெயர். அரு உயிர் - நிலைமொழி முதனீண்டு குற்றுகர விதி பெற்றது "ஆதிநீடல்" என்பதும், "முற்றுமற்றோரோவழி" என்பதும் விதிகள். கடி என்பது பல குணந் தழுவிய ஓருரிச்சொல்". இப் பாடலுக்கு ஞா. மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"பசுநெய் ஊற்றி வைத்திருந்த பாத்திரத்தில் இருந்து, அந்த நெய்யை நீக்க விட்டு, வேப்பெண்ணையை விட்டு வைத்திருப்பது போலாகும். தேனடை மிகுந்த வளமிக்க மலைநாட்டுக்குத் தலைவனே!. நன்மை தீமை உணர்ந்த பெரியோர்கள் நட்பை விட்டு விட்டு அறிவற்ற மூடர்களை நண்பராகக் கொள்ளுதல்"

239."ஆன்படு நெய்பெய் கலனுள் அது களைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ - தேம்படு
நல்வரை நாட! நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு."




இந்தப் பாடலுக்கு ஊ. புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.
"தேம்படு நல் வரை நாட - தேன் கூடுகள் சேர்ந்த நல்ல மலைநாடனே, நயம் உணர்வார்-சிநேகமறியும் படியானவர்களுடைய, நண்பு -, ஒரீஇ - நீக்கி, புல் அறிவினாரொடு நட்பு - அற்பஞான முடையவர்களோடு கொண்ட சிநேகம், ஆண் படு நெய் பெய் கலனுள் - பசுவினிட முண்டாகு நெய்யை ஊற்றியிருந்த மாத்திரத்தில், அது களைந்து - அந்நெய்யை எடுத்துவிட்டு, வேம்பு அடு நெய் பெய்தது அனைத்து - வேம்பைச் சேர்ந்த நெய்யை யூற்றினாற் போலாகும், அரோ-அசை." இப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"பசுநெய் ஊற்றி வைத்திருந்த பாத்திரத்தில் இருந்து, அந்த நெய்யை நீக்கி விட்டு, வேப்பெண்ணையை விட்டு வைத்திருப்பது போலாகும், தேனடை மிகுந்த வளமிக்க மலைநாட்டுக்குத் தலைவனே! நன்மை தீமை உணர்ந்த பெரியோர்கள் நட்பை விட்டு விட்டு, அறிவற்ற மூடர்களை நண்பராகக் கொள்ளுதல்."

240."உருவிற்கு அமைந்தான்கண் ஊராண்மை யின்மைீ
பருகற்கு அமைந்தபால் நீரளாய் அற்றே
தெரிவுடையார் தீயினத்தார் ஆகுதல் நாகம்
விரிபெடையோடு ஆடிவிட் டற்று."

இப்பாடலுக்கு ஊ. புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"உருவிற்கு அமைந்தான்கண் - அழகுக்கு ஏற்றவனிடத்து, ஊர் ஆண்மை இன்மை - ஒப்புரவில்லாமையானது, பருகற்கு அமைந்த பால் - குடிப்பதற்கு ஏற்ற பாலானது, நீர் அளாயற்றே - நீர் கலந்தாற் போலாம் தெரிவு உடையார் - விவேக முடையவர்கள், தீ இனத்தார் ஆகுதல் - தீமையான இனத்தைச் சேர்ந்தவராயிருப்பது, நாகம் - சர்ப்பமானது, விரி பெடையோடு - பெட்டை விரியன் பாம்பொடு, ஆடி விட்டற்று - புணர்ந்து நீங்கினது போலாம்," "நாகம் விரி பெடையோடு புணர்ந்தால் சாகுமென்பர். ஒப்புரவாவது உபகாரஞ் செய்யுங்குணம், சிநேகிப்பதற்கு ரூபமும் ஒரு காரணமாயிருக்க அவனிடத்தில் உப காரகுணமில்லாமையால் ருசி கெடுதலினால் பால் நீரளாயற்றே யென்றார். அளாய் - வினையெச்சம், யகரமெய் - விகுதி". இப்பாடலுக்கு ஞா. மாணிக்க வாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"உருவத்தால் நல்லவர் போல் தோன்றுகின்ற நண்பனிடத்தில், உதவி செய்யும் குணம் இல்லாதிருப்பது, குடிப்பதற்கென்று உள்ள பாலோடு நீர் கலந்தது போல், வெளித்தெரியாமல் போகலாம். இப்படிப்பட்டவர்களோடு நல்லோர் கொள்ளுகிற நட்பு நாகம் விரியன் பெண் பாம்போடு கூடியிருப்பது போன்ற கேடு செய்வதாகும்".

தீயோருடன் கொள்ளும் நட்பு பெரும் தீங்கையே தரும் என்பதை மேல் குறிப்பிட்ட நாலடியார் பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

நட்பினைப் பெற்றுக் கொள்வதில் இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன என்று உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவையாவன தனிப்பட்ட காரணிகள் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகள் ஆகும். தனிப்பட்ட காரணிகளில் அணுகக்கூடிய தன்மை, சமூகத் திறன்கள், சுய-வெளிப்பாடு, ஒற்றுமை மற்றும் நெருக்கம் போன்ற தாக்கங்கள் அடங்கும். சுற்றுச்சூழல் காரணிகளில் அருகாமை, புவியியல், செயல்பாடுகள் மற்றும் வாழ்க்கை நிகழ்வுகள் போன்ற தாக்கங்கள் அடங்கும். நல்ல நண்பர்கள் வாழும் சூழலில் வாழக்கிடைப்பது, நல்ல நண்பர்கள் உள்ள வகுப்பில் அல்லது நல்ல நண்பர்கள் உள்ள இடத்தில் தொழில்புரிவது எல்லாமே எல்லோருக்கும் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. சில சிறுவயது நட்புகள் நெடு நாட்கள் நிலைத்து நிற்கக் கூடியவை. அவ்வாறு நிலைத்து நிற்கும் சிறுவயது நட்புகள் மிகவும் ஆரோக்கியமானதாக இருப்பதைக் காணலாம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)






# நான் உருவ கேலிகளை தாங்கக்கூடிய வலிமையை பெற்றுவிட்டேன்

## நடிகை அபர்ணா பாலமுரளி - நேர்காணல் நேர்கண்டவர்: கண்ணன்

உற்சாகத்தில் இருக்கிறார் நடிகை அபர்ணா பாலமுரளி. சமீபத்தில் வெளியான 'நித்தம் ஒரு வானம்' படத்தில் இவர் நடிப்பு விமர்சன ரீதியாகவும் பாராட்டை பெற்றுள்ளது. இதனால் மீண்டும் தமிழில் வாய்ப்புகள் வரத் தொடங்கியுள்ளன. கேரளாவில் திருச்சூரில் பிறந்த அபர்ணா பாலமுரளி, 2015ஆம் ஆண்டு வெளியான 'ஒரு செகண்ட் கிளாஸ் யாத்திரை' என்ற மலையாள படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். ஆனால், பிரியதர்ஷன் இயக்கத்தில் பகத் பாசிலுடன் நடித்த 'மஹேஷிண்டே பிரதிகாரம்' என்ற படமே இவரை பரவலாக அறியச் செய்தது. தமிழில் '8 தோட்டாக்கள்' மூலம் அறிமுகமாகி, தொடர்ந்து 'சர்வம் தாளமயம்', 'சூரரைப் போற்று', 'வீட்ல விசேஷம்', 'தீதும் நன்றும்' போன்ற படங்களில் நடித்தார். இதில் 'சூரரைப் போற்று' தமிழில் இவரை பிரபலம் ஆக்கியதுடன் தேசிய விருதையும் பெற்றுக்கொடுத்தது. கதையம்சம் கொண்ட திரைப்படங்களை தேர்வு செய்து நடிக்கும் அபர்ணா பாலமுரளி, நடிகை மட்டுமில்லாமல் சிறந்த பாடகியும்கூட. 'விளம்பரம்' இதழுக்காக அபர்ணா பாலமுரளியை சென்னையில் சந்தித்தோம்.

**உங்களுக்கு நல்ல பெயரையும் இந்திய ஒன்றிய அரசின் தேசிய விருதையும் பெற்றுத்தந்த 'சூரரைப்போற்று' படத்தில் இருந்து தொடங்கலாம். அந்தப் படத்தில் நடித்த நாட்களை எங்களுக்காக நினைவுகூற முடியுமா?**



நிச்சயமாக, அந்தப் படத்தில் நடித்த நாட்கள் பற்றி பேசுவது எப்போதுமே எனக்கு விருப்பமாக இருக்கும். 'சூரரைப் போற்று' படத்தில் எனக்கு நடிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் இசையமைப் பாளர் ஜி.வி. பிரகாஷ் தான். அவர் சொன்னதால் முதலில் 'சூரரைப் போற்று' படத்துக்கான ஆடிஷனுக்காக என்னை அழைத்தார்கள். இரண்டு தடவை ஆடிஷன் போயிருக்கிறேன். ஆனால், நான் தேர்வாக வாய்ப்பு இல்லை என்றுதான் நினைத்தேன். அதனால், என்னுடைய தோழிகளுக்குக்கூட படப் பிடிப்பு ஆரம்பித்த பிறகுதான் அந்தப் படத்தில் நடிக்கும் தகவலை சொன்னேன். அப்போது எனக்குத் தமிழ் சரியாக பேச வராது. தமிழில் நான் அறிமுகமான '8 தோட்டக்கள்' படத்தில் ஏதோ பேசி சமாளித்துக் கொண்டேன். ஆனால், 'சூரரைப் போற்று' ஆடிஷன் போயிருந்த போது, அதில் வருகிற மதுரை பேச்சு வழக்கைக் கொண்டுவர நிறைய கஷ்ட பட்டேன். ஆனாலும், இயக்குநர் சுதா கொங்கரா என்னை நிராகரிக்காதது ஆச்சரியம்தான். மதுரை பேச்சுவழக்கை பயற்சி செய்துகொண்டு மீண்டும் வாருங் கள் என்று மட்டும் சொன்னார். நான் மறுபடியும் அந்த வசனம் பேசி பதிவு செய்து அவர்களுக்கு அனுப்பினேன். படப்பிடிப்பு ஆரம்பிக்கிற வரைக்கும் என்னை தேர்வு செய்திருக்கிறார்களா இல்லையா என்றே எனக்கே தெரியாது. ஒப்பந்தத்தில் கையெழுத்து போடும்போது புதிராகவே இருந்தது. இப்போது நான் நன்றாக தமிழ் பேசுவதற்கு 'சூரரைப் போற்று' முக்கியக் காரணம். தேசிய விருது முற்றிலும் எதிர்பாராதது. தகவல் தெரிந்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

**சூர்யாவுடன் நடித்த அனுபவம்?**

சூர்யா மிகவும் 'ரிசெர்வ்ட்' ஆன மனிதர். எல்லாம் சரியாக வரவேண்டுமென்று நிறைய மெனக்கெடுவார்.

**இயக்குநர் சுதா கொங்கரா குறித்து?**

அவர் ஒரு மிகச்சிறந்த பெண் இயக்குநர். தமிழ், ஹிந்தி, தெலுங்கு மொழிகளில் பல வெற்றிப் படங்களை கொடுத்திருக்கிறார். 'சூரரைப் போற்று' படத்துக்காக 2 வருடங்கள் 'ஹோம் ஒர்க்' பண்ணிருக் கிறார். ஒவ்வொரு காட்சியும் அருமையாக, முழுமையாக, தத்ரூபமாக இருக்க வேண்டுமென்று கடினமாக உழைப்பார்.

**திரையுலகில் முற்போக்கு சிந்தனையுடைய நடிகைகளில் ஒருவராகவும் நீங்கள் அறியப்படுகிறீர்கள். பெண்ணியம் பற்றிய உங்கள் கருத்து?**

பெண்களை உயர்வாக பேசிட்டு, ஆண் களைத் தரம் தாழ்த்துகிறது பெண்ணியம் இல்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும்

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)



RENT | BUY | SELL | INVEST | LEASE

# In CANADA from anywhere in the world

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers, Mortgage Brokers, Home Inspectors, Insurers ....



For
more information
Feel Free
to call or
visit to
www.hlgtarealty.com



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.




**நீண்ட தூர நெடுஞ்சாலை AZ டிரைவர் தேவை**

அணிகள் மட்டும்**
பாதைகள் NB-ON-US-ON*
பாதைகள் US மத்திய மேற்கு & கிழக்கு கடற்பரப்பு
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 கையொப்பம் போனஸ்*
- ✓ $500 பரிந்துரை போனஸ்*
- ✓ அனுபவத்தைப் பொறுத்து ஒரு மைலுக்கு $0.70 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ 6-8 நாட்கள் வெளியே தங்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ குறைந்தபட்ச வாராந்திர ஊதியம் $2200 முதல் $2500 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ தானியங்கி டிரக் புதிய மாடல்கள்; Freighliner & Volvo
- ✓ பிரத்யேக பாதைகள்.
- ✓ உங்கள் அரை மாத வருமானத்தை நாங்கள் நேரடியாக உங்கள் வங்கியில் டெபாசிட் செய்கிறோம்.

**குறைந்தபட்ச தேவைகள்:**

- ✓ AZ உரிமம் தேவை
- ✓ 6 மாதங்கள் சரிபார்க்கக்கூடிய அனுபவம்
- ✓ ஓட்டுநர் சுருக்கம்
- ✓ அமெரிக்கா விசா
- ✓ மருந்து சோதனை

**நீங்கள் அழைக்கலாம்;** Samuel (Sam) 902-932-7076 EXT#101 (அ) Shivek 902-316-2392

**வேலை வகைகள்:** முழுநேரம், நிரந்தரம்

**சம்பளம்:** வாரத்திற்கு $2,200.00-$2,500.00 வரை சம்பாதிக்கலாம்.

**பலன்கள்:**

- ✓ பல மொழி Dispatch ஆதரவு கிடைக்கிறது: தமிழ், ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி.
- ✓ மருத்துவ காப்பீடு.
- ✓ சாதாரண உடை.
- ✓ ஆன்-சைட் பார்க்கிங்.
- ✓ கூடுதல் ஊதிய வகைகள்.
- ✓ பாதுகாப்பு போனஸ் ஊதியம்.

**AZ HIGHWAY DRIVER WANTED !!**

TEAMS ONLY**
Lanes NB-ON-US-ON*
Lanes US Midwest & Eastern Seaboard
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 Signing Bonus*
- ✓ $500 Referral Bonus*
- ✓ Paying up to 0.70 per mile depending on the experience.
- ✓ Applicants willing to stay 6-8 days out will be given preference.
- ✓ Minimum weekly pay $2200 to $2500.
- ✓ Automatic truck Newer models; Freightliners & Volvos.
- ✓ Dedicated Shipments.
- ✓ Semi Monthly payments; Direct deposits to your Bank.

**MINIMUM REQUIREMENTS:**
- ✓ AZ License Required
- ✓ 6 Months Verifiable Experience
- ✓ Abstract
- ✓ US VISA
- ✓ Drug Test

You can call; Samuel (Sam) 902-932-7076 EXT#101 or Shivek 902-316-2392 text or WhatsApp

**Job Type:** Full-time, Permanent

**Salary:** Earn up to $2,200.00-$2,500.00 per week

**Benefits:**
- ✓ Multiple language Dispatch support Available: English, Hindi, Punjabi, Tamil
- ✓ Casual dress
- ✓ On-site parking
- ✓ Supplemental pay types:
- ✓ Safety Bonus pay

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt with sep. kitchen & washroom. Preferred no smoking working person. Avail. March 01, 2023. *Close to all amenities.*
தொடர்புகளுக்கு: **416.727.8681**

**MARKHAM & DENISON**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance & laundry. Avail. March 01, 2023.
**647.989.3804 / 647.235.4080**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom fully renovated bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all amenities.
தொடர்புகளுக்கு: **416.879.7373**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all amenities. No pets / no smoke.
தொடர்புகளுக்கு: **416.891.3100**

**FINCH & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance & parking Close to all amenities. Single / couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.8815**

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.768.3444**

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to All facilities. Avail. immediately. Ladies prefered.
**647.838.5448 / 647.201.7016**

**TAUNTON & WESTNEY**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry, new appliances. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.657.7191**

**STEELES (TAUNTON) & WHITES ROAD**
2 bedroom bsmt for rent. Parking, laundry. Close to bus & other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.560.5704**

**ROSSLAND & CHURCH (AJAX )**
2 bedroom bsmt for rent. 1 parking, laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.716.2706**

மேலும் பக்கங்கள் 13,14,15

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**ALTONA & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Nice environment with close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.729.4704**

## ROOM FOR RENT

**OSHAWA & SCARBOROUGH**
*Rooms for Rent in Oshawa & Scarborough. Students / working people preferred. Close to all amenities.* Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.731.3314**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedrooms for rent in a house. No parking. Students / working people preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.3256**

**9TH LINE & 14TH AVENUE**
Room For rent. Parking, laundry & internet. Close to YRT & all other facilities.Avail. Immediately.
**416.648.1987/416.669.3549**

**WARDEN & FINCH**
1 Room for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.495.9775**

**BELLAMY & ELLESMERE**
1 bedroom for ren in a bsmt. Male student / working people preferred. Avail. immediately.
**416.837.5023 / 416.725.4735**

**NEILSON & SHEPPARD**
Room for rent. Female preferred. Avail. immediately.
**416.875.4257 / 647.444.7218**

**MARKHAM & MCLEVIN**
Rooms for seniors with food and care. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.254.7648**

**MARKHAM & HIGHGLEN**
2 Rooms for rent. Parking. Shard washroom Close to all facilities. Avail. immediately.தொடர்புகளுக்கு:
**416.201.1222**

## HOUSE FOR RENT

**MIDLAND & EGLINTON**
3 bedroom house for Rent. Parking Available Immediately.
**416.463.1822 / 416.833.7729**

**MORNINGSIDE & MCNICOLL**
3 bedroom house for rent. Parking, laundry. Close to School & all facilities. Avail. February 15, 2023.
தொடர்புகளுக்கு: **416.648.7078**

**TOWNHOUSE FOR RENT**
**MORNINGSIDE & KINGSTON**
4 Bedrooms, 2 Parking, Rent $3100+ Utilities, TTC 1 Minute Walk Bus Stop 54,86,116 & 905 Express, Close to all amenities.
தொடர்புகளுக்கு: **416.319.3370**

**MARKHAM & STEELES**
4 bedroom & 2 livingroom house for rent. 3 washrooms & 2 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 662.1529**

## BASEMENT FOR RENT

**SHEPPARD & NEILSON**
4 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, internet & parking. 2 mins walk to TTC. Close to U of T & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.556.2581**

## BASEMENT FOR RENT

**TAUNTON & WHITES – BURKHOLDER (PICKERING)**
Newly built 2 bedroom bsmt for rent. Sep. entrance, large living room, 2 parking, sep.laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.898.7590**

## BASEMENT FOR RENT

**14th AVENUE & 9TH LINE**
1 bedroom bsmt for rent. Sep. entrance. 1 parking & laundry. No pets & no smoking. Couple preferred. Avail. immediately.
**647.983.8242 /416.602.2709**

## BASEMENT FOR RENT

**MEADOWVALE & SHEPPARD**
Brand new 3 bedroom bsmt for rent. Sep. entrance. 2 washrooms, Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.856.0250**

## BASEMENT FOR RENT

**STEELES & STAINES MORNINGSIDE**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Close to all facilities. No pets, no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.878.2801**

## BASEMENT FOR RENT

**MARKHAM & BRIMORTON**
2 large rooms, 2 washrms with lots of natural light. Sep. entrance. Bright kitchen, potlights. Close to all amenities. 1 parking. Bills incl. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.887.5478**

## BASEMENT FOR RENT

**MARKHAM & PAINTED POST**
2 Bedroom bsmt for rent. Sept. entrance. Parking. No pets, no smoke. Close to all facilities. Avail. immediately.
**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent.
தொடர்புகளுக்கு: **647.998.0181**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedroom bsmt for rent. 2 washrooms, sep. entrance, Parking & sep.laundry. Few steps to bus stop & other facilities. Avail. March 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.305.7317**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVE. MARKHAM**
2 bedrooms+ 2 bathrooms basement for rent. Sep. entrance, laundry, 1 car parking, no pets & no smoking. Close to David Suzuki Public School. Avail. March 01, 2023.
**416.930.3713 / 416.768.1824**

## BASEMENT / ROOM FOR RENT

**MCCOWAN & SHEPPARD**
2 bedroom basement for rent. Laundry, internet & parking. Also 1 Bedroom for rent (main floor) Sep. washroom, internet & parking. Avail. immediately.
**905.294.3531/ 647.330.7482**

## ROOM FOR RENT
**MARKHAM & STEELES**
1big & furnished room for rent in a house. Sep. full washroom. Shared kitchen. Couple or 2 single female & vegetarians preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.201.5697**

## ROOMS FOR RENT
**OLD KENNEDY & STEELES**
2 Rooms for rent. Shared kitchen, wash room, washer & dryer. Renting for females only. Avail. immediately. Close to different banks, grocery stores, walking distance to 3 different route TTC buses & walking distance to Milliken GO train station.
தொடர்புகளுக்கு:**647.680.1773**

## ROOM FOR RENT
**PHARMACY & LAWRENCE**
2 Bedrooms for rent in a 3 bedrooms bsmt. Parking. Avail. immediately. Close to TTC, School & Grocery stores.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## BASEMENT FOR RENT
**MEDOWALE & ELLESMERE**
3 bedroom bsmt for rent. Sep. entrance,2 full washrooms, parking & laundry. Close to U of T, schools, hwy 401 & all other facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.5420**

## ROOM FOR RENT
**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent in a house. Female professional or Students preferred. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***647.657.8776***

## ROOM FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
Room for rent. Laundry & parking. working people preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3482**

## ROOM FOR RENT
**MEADOWALE & HWY 401**
3 bedrooms for availabel for ladies. Share kitchen. Parking & laundry. Close to all the facilities. Available immediately.
**647.999.5420/647.654.8468**

## CONDO. ROOM FOR RENT
**ST.CLAIR & KINGSTON**
1 bedroom for rent in a 2 bedroom condo. 2 students preferred. Close to all amenities.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.2587**

## ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
Large rooms Available. Single - $700. 2 person - $900, 3 person - $1,200 inclu. utilities. Short term & long term. No kitchen, Avail. immediately. No smoke / no alcohol & no pets.
**647.507.2148/647.864.1051**

## HOUSE FOR RENT
**McCowan & McNicoll**
4 Bedroom house for rent with 1 bedroom bsmt.Sep. entrance, bsmt with kitchen. 2 cars Garage, 4 cars on driveway. Avail. April 01, 2023.
**647.406.9882/416.724.9882**

## HOUSE FOR RENT
**NEILSON & SHEPPARD**
3 Bedroom & 2.5 washrooms house for rent. Close to all the facilities. No pets & no smoking. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.390.8269**

## HOUSE FOR RENT
**BELLAMY & LAWRENCE**
4 bedrooms house for rent. 2 washrooms. Newly painted. Laundry, parking.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **514.941.8272**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
3 Bedroom house for rent. 2 Full washrooms. Steps to TTC, School & Grocery stores. 3 parking. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

## HOUSE FOR RENT
**KENNEDY & LAWRENCE**
3 bedrooms house for rent. 1½ washrooms. 2 parking. Utilities 60%. Avail. April 01, 2023. Close to all facilities.
**289.244.8555 / 905.441.3328**

## HOUSE FOR RENT
**TAPSCOTT & MCLEVIN**
**4 Bedrooms 2 story upstairs house for rent. 3 parking. Avail April 01, 2023. Plus utilities.Close to all facilities.**
தொடர்புகளுக்கு:**647.778.8375**

## வீடு விற்பனைக்கு
வெள்ளவத்தையில் ஹம்டன் லேனில் 2 அறை வீடு 4ஆம் மாடியில் விற்பனைக்கு உண்டு. விலை 98 இலட்சம்.
**Sri Lanka–whatsapp 071.484.0610**
**Canada – 289.889.2568**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
Contact: **647.686.8590**

## LANDS FOR SALE
**Cardinal**இல் **1 lot and MORRISBURG & HWY 401 East**இல் அமைந்துள்ள **2 acre** காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - **Shan:**
**416.858.4310**

## HOUSE FOR RENT
**WELLAWATTE – SRI LANKA**
5 Bedrooms & 3 Washrooms Condo. for rent in the first floor. Close to Delmon Hospital. தொடர்புகளுக்கு:
**647.607.6063/94.754 105270**

## HOUSE FOR RENT
**McCowan & Lawrence**
**3 bedroom house for rent. Main floor. Parking. Close to all facilities.**
**Avail. March 01, 2023.**
தொடர்புகளுக்கு: **647.309.9909**

## HOUSE FOR RENT
**SCAR.GOLF CLUB & LAWRENCE**
**2 Bedrooms bungalow house for rent. Laundry & parking.Close to all amenities.**
தொடர்புகளுக்கு:**416.454.9986**

## HOUSE FOR RENT
**MARKHAM & SHEPPARD**
*3 Bedrooms house for rent - main floor. 1½ washrooms, 2 parking. Very convenient location. Avail. March 2023.*
**647.780.2463/647.824.2357**

## *BASEMENT FOR RENT*
**BELLAMY & ELLESMERE**
2 bedroom bsmt apt. for rent. Sept. Entrance. Parking, laundry. Close to all facilities. No pets & no smoking. Small family preferred. Avail. April 01, 2023. தொடர்புகளுக்கு:
**647.993. 3616 / 416.276.9780**

## *BASEMENT FOR RENT*
**NEILSON & SHEPPARD**
1 bedroom bsmt apt. for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.291.2050**

## *BASEMENTS FOR RENT*
(1) Ajax Basement Available **Salem &Taunton**,1 bedroom, kitchen, 1 washroom separate entrance, Two car parking.
(2) Pickering Basement Available. **White Road& Taunton** 2 bedroon,1washroom, separate entrance,2 car parking.
(3) **Markham** Basement Avai., 2 bedroom,1washroom,Kitchen separate entrance. தொடர்புகளுக்கு: ***647.282.5782***

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## பிள்ளைகள் பராமரிப்பு

ஒரு வயதிலிருந்து உங்கள் பிள்ளைகளை காலை 7 மணியில் இருந்து இரவு 10 மணிவரை எந்நாளும் பராமரிக்க வேண்டுமா?

அழையுங்கள்: **416.413.7894**

## பெண் உதவியாளர் தேவை

**VICTORIA PARK & ELLESMERE**

சந்திப்புக்கு அருகாமையில் வாழும் முதியவருக்கு பெண் உதவியாளர் தேவை. விரும்பின் தங்குமிட வசதிகள் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647.833.5772**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820/647.868.2440**

## LASHES BY SELVI

**MORNINGSIDE & MCLIVEN**

**Certified lash tech**

*** Eyelash extensions Classic, hybrid, Russian volume and mega volume. *lash Lift & Tint.**

*** Eyebrow lamination and tint**

**Google/Instagram–lashesbyselvi**

தொடர்புகளுக்கு: **416.303.2785**

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR

House, Condo, Basement

வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- **647.861.8240**

## CHEF / LINE COOK WANTED

**KEELE & DUNDAS** இல் அமைந்துள்ள **SPORTS BAR** ஒன்றிற்கு அனுபவமுள்ள **Chef/ line cook** தேவை. Full time & Part time

**416.889.3191 / 416.919.8720**

**Email: sivakumarsitt@gmail.com**

## முதியோர் பராமரிப்பு

வயதான அம்மா ஒருவரை வீட்டில் இருந்து பராமரித்துக் கொள்வதற்கு முழு நேர உதவியாளர் ஒருவர் உடனடியாக தேவைப்படுகிறார்.

தொடர்புகளுக்கு: **416 725 6167**

## பெண் பராமரிப்பாளர் தேவை

Need a female care take care of 70 year old woman includes assist with care-taking, cooking, & cleaning in Scarborough. Looking for coverage from 2 to 9pm Fridays & coverage on weekends. Please call: 6476181657 for more information

70 வயது பெண் ஒருவருக்கு உணவு தயாரித்தல், துப்பரவாக்கல் போன்ற பராமரிப்புத் தேவைகளுக்காக பெண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை. பராமரிப்பாளர் வருகை தர வேண்டிய நாட்கள்: வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 9 மணிவரை மற்றும் வார இறுதி நாட்கள்.

**Pl. Call: 647–618–1657 for more information.**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**GERRARD & COXWELL** ல் அமைந்துள்ள Canadian Restaurant ஒன்றிற்கு

**Chef, line Cook & Breakfast cook Wanted immediately.**

**FULL TIME / PART TIME JOB AVAILABLE.**

Line Cook,Chef & Breakfast cook போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.

Call : **416.220.9179**

Email: chadsenagroup@gmail.com

## CAR FOR SALE

Used car for sale - 2019. BMW - 430i - X Drive Gran coupe

76 KM Same owner. For more information

Email to **Vlambaram@sympatico.ca**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen.

தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).

Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## *CLEANERS WANTED*

Scarboroughவில் அனுபவமுள்ள பகுதிநேர Cleaners வேலைக்குத் தேவை.

காலை நேரம்.

தொடர்புகளுக்கு : **416.858.6316**

## *CLEANING SERVICE*

**Residential & Commercial**

**call for a FREE ESTIMATE!**

**குடியிருப்பு மற்றும் வணிக துப்புரவு சேவை.**

**இலவச மதிப்பீட்டிற்கு அழைக்கவும்.**



**Jay & Prash – 416.799.0811**

## *CLEANERS NEEDED*

**Day & Night cleaners Immediate Start Keele & Jane Street Vaughan. Must have own transport.**

**Monday to Friday 7AM to 4PM. Evenings Mon– Friday after 6pm**

**Please Text message "Cleaner" on 416–936–1873**

**Or leave a message–Calls will not be answered**

**Please call: 416–936–1873**

## RENOVATION

- **Plumbing**
- **Painting**
- **Electric**
- **Basement**
- **Hardwood**
- **Tiles**
- **Laminating**
- **Landscaping**
- **Kitchen**
- **Interlock** ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

**Dinesh: 647.625.2239/ drsharvin15@gmail.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12, 13, 14

- நமது எண்ணங்கள் மிகவும் வலிமையானது. அவற்றை பூக்களைப் போல தூவினால் அது நமக்கு மாலையாகக் கிடைக்கும். கற்களைப் போல எறிந்தால் அது நமக்குக் காயங்களாகக் கிடைக்கும்.
- உண்மையான உறவுகள் என நம்பியவர்கள் சில சமயம் வேசம் போடுவதால் உண்மையான அன்பும் ஊமையாகிப் போகிறது.

உங்களை நம்பியவர்களை ஒருபோதும் காயப்படுத்தாதீர்கள். அதன் வலியைப் போக்க எப்போதுமே வழி இருக்காது.

- அதிகமாகக் கோபம் வருகிறது எனில் அவர்கள் நேர்மையாளர் என்று அர்த்தம், ஏனெனில் ஏமாற்றங்களைத் தாங்கும் சக்தி நேர்மையானவர்களிடம் இருப்பதில்லை.

wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் எனது 33 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கரு கந்தையா - 416.616.7278
Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

JOB FOR ENGINEER

A Geotechnical Engineering consulting company in Cleveland, Ohio, US is currently seeking an ambitious, self-motivated candidate with geotechnical related experience to work in the office, sites, and laboratory. The candidate will be responsible for performing inspections at the construction sites, testing soils and rock at the laboratory, and assisting preparation of geotechnical reports in the office. We will provide all the training and certifications to get the job done.

Must hold a BS Degree in Civil Engineering with 1-3 years experiences in field of geotechnical engineering.

Qualified candidate will send the resume to **shansiva@progeotech.com**

# நான் உருவ...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

சம உரிமை கொடுப்பதுதான். என் உரிமையை விட்டுக்கொடுக்கவும் மாட்டேன், மற்றவர்கள் உரிமையை பறிக்கவும் மாட்டேன். இதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

**ஆனால், நீங்கள் இருக்கும் திரைத்துறையிலேயே நடிகர் - நடிகைகளுக்கான சம்பளத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கிறதே?**

உண்மைதான். சம்பளத்தில் மட்டுமல்ல நடிகர் - நடிகையர்களை அணுகும் விதத்திலும் வித்தியாசம் இருக்கிறது. அதே நேரம், முதல் படம் வெற்றிப்படமாக ஆகவில்லையென்றால் மொத்த திரைத்துறையும் அப்படத்தின் கதாநாயகனை கை கழுவிவிடுவார்கள். அதேசமயம் கதாநாயகிக்கு அடுத்தடுத்த வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கும். இப்படி ஆண்களுக்கும் பிரச்சினைகள் உள்ளது.

**மலையாளத்தில்தான் அதிக படங்களில் நடித்திருக்கிறீர்கள். தமிழில் ஏன் இவ்வளவு குறைவான படங்கள்?**

கோலிவுட் ஒரு மிகப்பெரிய திரைத்துறை. நான் கோலிவுட்டுக்கு வருவேனென்று எதிர்பார்க்கவே இல்லை. அதனால் இங்கே கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை நல்லபடியாக பயன்படுத்த வேண்டும் என்ற முடிவில் இருக்கிறேன்.

**என்னமாதிரியான கதாபாத்திரங்களில்**



**நடிக்க ஆசை?**

'நித்தம் ஒரு வானம்' மாதிரி வெகுளித்தனமான கதாபாத்திரங்களில் நடிப்பதில்தான் எனக்கு அதிக விருப்பம். ஆனால், அதிக இயக்குநர்கள் தைரியமான பெண் கதாபாத்திரம் இருக்கிறது, நடிக்கிறீர்களா என்றுதான் வருகிறார்கள். அந்த மாதிரி கதாபாத்திரத்தில் எனக்கு விருப்பமில்லை. ஒரு தைரியமான பெண்ணின் அடையாளம் 'புல்லட் பைக்' ஓட்டுவதோ, சிகரெட் குடிப்பதோ இல்லை. தனக்கென்று ஒரு அடையாளம், தனக்கென்று ஒரு கொள்கையோடு வாழ்கிறதுதான் தைரியமான பெண்ணின் அடையாளம். ஆனால், நமது படங்களில் அப்படி இருப்பதில்லையே.

திரைத்துறையில் இருக்கிற பயங்கரமான விஷயம் என்னவென்றால் ஒரே மாதிரியான கதாபாத்திரங்களுக்காகவே அணுகுவது. நாம் நடித்த ஒரு கதாபாத்திரம் நன்றாக வந்தால், அது வெற்றிப்படமாகவும் அமைந்தால் தொடர்ந்து அதே மாதிரியான கதாபாத்திரத்துக்கு முத்திரை குத்திவிடுவார்கள். வேறு ஒரு புதுமையான கதாபாத்திரம் செய்ய முடியாமல் போய்விடும். உதாரணத்துக்கு மலையாளத்தில் 'மகேஷிண்டே பிரதிகாரம்' படத்தில் என்னுடைய ஜிம்சி கதாபாத்திரம் பிரபலம் ஆனதால் அதே மாதிரி கதாபாத்திரம்தான் நிறைய வந்தது.

**பாடகி அபர்ணா பற்றி?**

மலையாளத்தில் நிறைய பாடல்கள் பாடியிருக்கிறேன். தமிழிலும் சில பாடல்கள் பாடியிருக்கிறேன். எனது அப்பா, அம்மா இரண்டு பேருமே இசைக் கலைஞர்கள்தான். எனவே, பாடல் எனக்கு இயல்பாக அமைந்தது. எதிர்பாராமல்தான் நான் நடிக்க வந்தேன்.

**சமூக வலைதளங்களில் நீங்கள் உருவ கேலிகளுக்கு ஆளானீர்கள். அவை உங்களை காயப்படுத்தியதா?**

கொரோனா பொது முடக்கம் சமயத்தில்தான் சமூக ஊடகங்களில் அந்த மோசமான 'மீம்ஸ்' எல்லாம் வெளியாகியிருந்தது. ஒருவரின் உருவத்தை கிண்டல் கேலி செய்து மீம்ஸ் போட்டிருந்தார்கள். அதிலும் நான் குண்டாக இருந்தது குறித்தும் பல்வேறு விதமாகப் பேசி இருந்தனர். அதையெல்லாம் பார்த்த போது எனக்கு வருத்தமாக இருந்தது. அதற்கு முன்பு ஒரு முறை நான் மாடலிங்கில் இருக்கும் போது என்னுடைய புகைப்படத்தை 'மார்பிங்' செய்து சமூக ஊடகத்தில் மிகவும் கேவலமாகப் பதிவிட்டு இருந்தனர். அப்போது நான் ரொம்பவே மன அழுத்தத்திற்கு சென்றுவிட்டேன். அடுத்து எதுவுமே செய்ய முடியாது, நடிப்புத் துறையே வேண்டாம் என்றெல்லாம் யோசிக்கிற அளவுக்கு சென்றுவிட்டேன்.

ஒருவரை குண்டாகிவிட்டதாக 'ட்ரோல்' செய்பவர்கள் அந்த நபர் எதனால் அப்படி ஆனார் என்ற உண்மையான காரணத்தை அறிந்துகொள்ளாமல் அப்படி பேசுவது என்ன வகையான மனநிலை என்று எனக்கு புரியவில்லை. ஒருவரது எடை கூடுவதற்கு உடல் பிரச்சினையும் ஒரு காரணமாக இருக்கலாம். அனைவரும் மூன்று வேளைதான் சாப்பிடுகிறோம், நான் மட்டும் அதிகமாக சாப்பிடுகிறேனா என்ன?



ஆனால், இப்போது அதனை எல்லாம் நான் கண்டுகொள்வது கிடையாது. நான் உருவ கேலிகளை தாங்கக்கூடிய வலிமையைப் பெற்றுவிட்டேன். என் மீது எனக்கு தன்னம்பிக்கை அதிகமாகி இருக்கிறது. நான் எப்படி இருக்கிறேனோ அப்படியே ஏற்றுக்கொண்டு என்னை நடிக்க அழைப்பவர்கள் ஏராளமாக இருக்கின்றனர். ஒல்லி நடிகைகளை மட்டுமே கதாநாயகியாக ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது உண்மை கிடையாது. இதை நாம் பல நடிகைகள் வரலாற்றில் பார்த்திருக்கிறோம். நடிகரோ நடிகையோ திறமைதான் முக்கியம்.

**எப்போது திருமணம்?**

வழக்கமாக எல்லா பேட்டிகளிலும் கேட்கப்படும் கேள்வி. நீங்கள் கேட்க மாட்டீர்கள் என்று நினைத்தேன். என் கணிப்பு தவறாகிவிட்டது. உண்மையில், இதுபோன்ற கேள்விகளை கேட்டால் இப்போதெல்லாம் எனக்கு எரிச்சல்தான் வருகிறது.

# வாரிசு - திரைவிமர்சனம்


ஆரணி ஞானநாயகன்

விஜய் நடிப்பில் இவ்வருடம் பொங்கலுக்கு வெளியான படம் வாரிசு ஆகும்.

இப்படத்தில் விஜய் தனது பணக்காரத் தந்தையான இராஜேந்திரனின் (சரத்குமார்) நிறுவனத்தில் வேலை செய்ய விரும்பாமல் வீட்டை விட்டு வெளியேறுகிறார். விஜயின் இரு அண்ணன்களான ஜெய் மற்றும் அஜெய் தங்களது தந்தையின் நிறுவனத்தை தந்தைக்குப் பிறகு பொறுப்பேற்கப் போட்டி போடுகின்றனர்.

விஜய் இல்லாத காலத்தில் ஜெயிற்கு குடும்ப பிரச்சினையும், அஜெய்க்கு தொழில் பிரச்சினையும் ஏற்படுகிறது. இவற்றுக்கும் மேலாக இராஜேந்திரனுக்கு தனக்கு புற்றுநோய் இருக்கிறது என்று தெரிய வருகிறது.

அம்மா தங்களது 60ஆம் கல்யாணத்துக்கு அழைத்ததால் 7 வருடங்களுக்குப் பிறகு விஜய் வீட்டிற்கு வருகிறார். இவ்வேளையில்தான் தொழிலில் வெற்றி பெற்றாலும், வீட்டில் தோல்வி அடைந்ததாக எண்ணும் இராஜேந்திரன் விஜயிடம் உதவி



கேட்கிறார்.

ஏன் தனக்கு வேலை செய்யும் இரண்டு மகன்களையும் விட்டு விட்டு விஜயிடம் உதவி கேட்கிறார்? இதை விஜய் ஏற்பாரா? எவ்வாறு விஜய் தனது குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பார்? என்ற கேள்விகளுக்குப் பதிலைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

பல வருடங்களுக்குப் பிறகு குடும்பத்தைப் பற்றிய கருத்தை மட்டுமே கொண்டுள்ள படத்தில் விஜய் நடித்துள்ளார். வெவ்வேறு வகையான உறவுகளைப் பற்றிய கருத்துகள் இதில் காட்டப்படுகின்றன. இவை எதிர்பார்த்த விதத்தில் தெரியப் படுத்தப்பட்டாலும் பார்க்க நன்றாக இருக்கின்றன.

உதாரணத்திற்கு, விஜய் தனது அம்மாவை ஒருத்தரும் கவனிக்கவில்லை என உணர்ந்து அவருடன் நட்பாகப் பழகும் காட்சிகள் நன்றாக உள்ளன. இதனால் இப்படம் அனைவரும் குடும்பத்துடன் பார்க்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. விஜயும் வழமைபோல நடிப்பிலும் நடனத்திலும் சிறப்பித்துள்ளார். கதாநாயகி ராஷ்மிகாவிற்கு இப்படத்தில் முக்கிய பங்கு இல்லை. பல நடிகர்கள் சில காட்சிகளில் மட்டும் வந்து சிறப்பிக்கின்றனர்.

ஜெயையும், அஜெயையும் திருத்துவதே படத்தின் முக்கிய கருத்தாக இருக்கிறது. ஆனால், சிலவேளைகளில் அவர்கள் செய்த தவறுகள் மன்னிக்கக் கூடியதா என்று தோன்றுகிறது.

முக்கியமாக ஜெய் தனது மனைவியை விட்டு வேறு பெண்ணுடன் தொடர்பு கொள்வது போதிய அளவு கவனிக்கப்



படவில்லை. விஜய் இந்த சூழ்நிலையை கண்ணியமாகக் கையாண்டாலும், பார்வையாளர்களால் ஏற்கக் கூடிய தீர்வு ஒன்றும் படத்தில் காட்டப்படவில்லை. இதற்குப் பதிலாக இயக்குநர் ஏற்கனவே காட்டிய மாதிரி ஜெயின் மகளின் பிரச்சினைக் கதையை மட்டும் காட்டி இருக்கலாம். தந்தை - மகள் கதை பொருத்தமாகவும் பார்வையாளர்கள் ஏற்கக் கூடியதாகவும் இருந்திருக்கும்.

இருந்தாலும் குடும்பத்தையும், வாழ்க்கையையும் பற்றிய முக்கிய கருத்துகளை உணர்த்தும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

---

# பேராசிரியர் எஸ். பசுபதி அவர்களின் பிரிவுத்துயர் பகிர்வு


குரு அரவிந்தன்

பேராசிரியர் பசுபதி அவர்களை கனடாவில் தான் முதன் முதலாகச் சந்தித்தேன். அமைதியான, சிரித்த முகத்தோடு எல்லோரோடும் அன்பாகப் பழக்ககூடிய ஆழ்ந்த இலக்கிய அறிவு கொண்ட மனிதராக அவரை என்னால் இனம் காணமுடிந்தது. அதன்பின் அவரை அடிக்கடி ரொறன்ரோ தமிழ் சங்கத்தில் சந்திப்பதுண்டு, அவரது உரைகளையும் கேட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, அவரோடு ஒருநாள் உரையாடியபோது, அவர் தன்னை எனது வாசகன் என்று சொல்லி என்னை ஆச்சரியத்தில் மூழ் கடித்திருந்தார்.


ரொறொன்ரோவில் நடந்த ஒரு நிகழ்வில், சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் அவர்கள் ஆனந்த விகடன் இதழில் வெளிவந்த எனது குறுநாவலான 'நீர்மூழ்கி' பற்றிக் குறிப்பிட்டு, அதன்மூலம் ஆயிரக்கணக்கான வாசகர்களை உரு வாக்கியிருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார். சிற்றுண்டி நேரத்தின்போது இவர் என்னிடம் நேரே வந்து கைகொடுத்து தன்னை அறிமுகப்படுத்தி, நீங்கள்தான் அந்தக் கதையின் ஆசிரியர் என்பதை இன்றுதான் தெரிந்து கொண்டேன். விகடன் பவழவிழா ஆண்டு மலரில் உங்கள் 'விகடனும் நானும்' என்ற கட்டுரையை வாசித்திருந்தேன், அதன்பின் தான் ஆர்வம் காரணமாக இந்த நீர்மூழ்கிக் கதையை வாசித்தேன் என்றார்.

கதையின் முக்கியமான இடங்களை அப்படியே எடுத்துச் சொன்னார். 2001ஆம் ஆண்டு விகடனில் வெளிவந்த கதையை எப்படி நினைவில் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன்.

அதற்கு அவர் தனது பொழுதுபோக்கே வாசிப்புத்தான் என்றும், அறிவியல் கதை என்பது மட்டுமல்ல, இந்தக் கதை மனதில் பதிந்ததற்கு இன்னுமொரு காரணம் அதற்குப் படம் வரைந்த அந்த ஓவியர்கள்தான் என்றும், தனக்கு ஓவியங்களில் அதிக ஆர்வம் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இதுவரை விகடனில் இதுபோல, ஐந்து ஓவியர்கள் எந்தவொரு கதைக்கும் படம் வரைந்த தில்லை என்பதையும் குறிப்பிட்டார். என்னைப் போன்ற ஒரு வாசகர்தான் அவரும் என்பது அப்போது எனக்கும் புரிந்தது, காரணம் நானும் தொடக்க காலத்தில் ஓவியங்களைப் பார்த்துத்தான் வாசிப்பதற்கான கதைகளைத் தெரிவு செய்தேன். ஆனால் இவர் ஓவியர் ராமு, ஜெயராஜ், மாருதி, அர்ஸ் என்று அந்த நாட்களில் பிரபலமான அந்த ஓவியர் களின் பெயர்களையும் ஒவ்வொன்றாக நினைவு படுத்திச் சொன்னார். இன்னும் ஒருவரின் பெயர் நினைவுக்கு வரவில்லை என்றார், நான் ஓவியர் 'பாண்டியன்' என்று சொன்னேன்.

அதேபோல தீபாவளி மலரில் 'நங்கூரி' என்ற எனது கதைக்கு ஓவியம் வரைந்த கண்பார்வையை இழந்த 'ஓவியர் மனோகர்' பற்றியும் சில தகவல்கள் சொன்னார். உண்மையிலே இந்த ஓவியர்கள் மீது அதிக அக்கறை கொண்டு, அவர்களைப் பற்றி அறிந்தும் வைத்திருந்தார். அவர்கள் எனது கதைக்கு வரைந்த படங்கள் என்னிடம் இருந்தால் அனுப்பி விடமுடியுமா என்று கேட்டார், அவற்றை அவருக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு நன்றி தெரிவித்திருந்தார்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் வருடாவருடம் வாழ்நாள் சாதனையாளர்



களைக் கௌரவிப்பது வழக்கமான ஒன்றாகும். இணையத்தின் தலைவராக நான் இருந்தபோது, வாழ்நாள் சாதனை யாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுக்கு 2019ஆம் ஆண்டு இருவரைத் தெரிவு செய்திருந்தோம், அவர்களில் ஒருவர் பேராசிரியர் எஸ். பசுபதியாவார். விபரத்தை அவருக்குத் தெரிவித்தபோது, கனடாவில் 25 வருடத்திற்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட எழுத்தாளர் இணையம் தனக்கு மதிப்பளிப்பதைப் பெருமையாகக் கொள்வதாக அறிவித் திருந்தார். ஆனால் 'எதுவுமே சொல்ல முடியாது, உடல் நலம் நன்றாக இருந்தால் கட்டாயம் கலந்து கொள்வேன்' என்று உறுதி அளித்திருந்தார்.

ஒருவர் வாழும்போதே அவரைக் கௌரவிக்க வேண்டும் என்ற கொள்கை யோடு செயற்பட்ட எனக்கு, அவரது அந்த வார்த்தை ஏதோ ஒன்றை அவர் சொல்ல நினைப்பது போன்ற தாக்கத்தை எனக்குள் ஏற்படுத்தி இருந்தது. அதனால் அவசரமாக இந்த விழாவுக்காக ஐயப்பன் கோயில் மண்டபத்தை நாங்கள் தெரிவு செய்து, முற்பணமும் கொடுத்து விழாவுக் கான திகதியையும் அறிவித்திருந்தோம். திரும்பவும் அவருக்கு விழா பற்றிய விபரங்களை தொலைபேசியில் அறிவித் திருந்தேன். ஆனால் கோவிட்-19 காரண மாக எதிர்பாராத விதமாக மண்டபங்கள் எல்லாம் மூடப்பட்டு, ஒன்று கூடுதல் எல்லாம் தவிர்க்கப்பட்டதால், மேற் கொண்டு விழாவை எம்மால் முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. அதனால் அவரைக் கௌரவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் நாங்கள் இழந்து விட்டோம்.

பேராசிரியர் எஸ். பசுபதி அவர்களின் இழப்பு கனடிய தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகும். பேராசிரியரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தா ருடன் இணைந்து அவர்களின் துயரத்தில் நாங்களும் பங்கு பற்றி, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி.

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com



INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,
Brokerage Independently Owned And Operated
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8
HOMELIFE

# விழுமியங்களை...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

விழுமியங்கள் ஒழுங்காகப் பின்பற்றப்படுவதன்மூலம் சமூகத்தில் களவு, துர்நடத்தைகள், வன்புணர்வுகள், ஏமாற்றங்கள், சமூகச்சீரழிவுகள், வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமை, சூழலை



மாசுபடுத்தல், பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளை வித்தல், பெரியோரை மதிக்காமை, அமைதியைக் குலைத்தல், சட்டத்தை மதிக்காமை, கடமை தவறுதல் என்பவற் றிலிருந்து விடுபட முடியும். இவை எமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் நன்மை பயக்கும். ஆபிரகாம் லிங்கன் கூறியது போன்று, "ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென மனதில் தீர்மானித்துக் கொள்கிறானோ அந்த அளவுக்குத்தான் அவனால் மகிழ்ச்சியாக வாழமுடியும்".


சகல நிறைவும் பெற்றவராக ஒருவர் வாழ வேண்டுமாயின் விழுமியப் பண்புகளைக் கொண்டவராக அவர் விளங்க வேண்டும் என்பதில் மாற்றம் இல்லை. அன்பு என்ற விழுமியப் பண்பைப் பொறுத்தமட்டில், இவை மனிதனைப் பண்படுத்தவேயன்றி புண்படுத்த அல்ல. அன்பில்லாத உள்ளத்தில் பகை அடைந்து கிடக்கும். அன்பு புனிதமானது. பொறுமை உள்ளது. சாந்தமுள்ளது. இழிவானதைச் செய்யாது. தன்னலம் இல்லாதது. இதுதான் அன்பின் சிறப்பு. ஆனால், இன்று எதிர்பார்க்கும் அன்பு இழிவான அன்பு எனப் பல்வேறு வடிவங்களில் இவ் அன்பானது மாசுபடுத் தப்படுகின்றது. மாசுக்குள் அகப்பட்டவர் வாழ்வு துன்பமே.

ஒருவன் நேர்வழியில் மன்னிக்கும் பண்பு கொண்ட விழுமியப் பண்புடன் வாழ வேண்டும். ஆனால் இந்த அரிய குணம் இன்று அருகி வருகின்றது. அருகி வருவதால் சிறிய பிரச்சினைகள்கூட பெரிதாகிப் பூதாகரமாகி நிற்கின்றன. மன்னிக்கும் பண்பு தெய்வ அம்சம் பொருந்தியது. எனவே இந்த விழுமியத்தைப் பின்பற்றுவதன்மூலம் அவன் சமூகத்தில் உயர்வடைகின்றான். மதிக்கப்படுகின்றான். இது இல்லாத சிலர் இன்று சமூகத்தில் மிதிக்கப்படுகின்றனர். வாழ்வில் மனித நேயம் மிக முக்கியமானதாகும். இதன்மூலம் ஒருவன் அன்பு, பாசம், ஆரோக்கியம், நட்பு, மதிப்பு என்பவற்றை அடைந்துகொள்கின்றான். மனித நேயத்தை வளர்க்கும் பொறுப்பு பெற்றோரையே சாரும். ஒவ்வொரு குடும்பமும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். இதன் விழுமியத்தை விதைக்கத் தவறிய பெற்றோர் தமது முதுமைக் காலத்தில் அதன் பாதிப்பை அனுபவித்து வருகின்றனர். பெற்றோரை மதித்தல், பெற்றோர் தமக்கிடையே ஒழுங்காக இருத்தல், விருந்தினரை உபசரித்தல், இறை வழிபாடு, உறவினர்கள், சகோதரர்கள்மீது அன்பு காட்டுதல், முதியோரை மதித்தல் போன்ற நாளாந்தம் வீட்டில் நிகழும் பணிகள், நடத்தைக் கோலங்கள் ஆகிய வீட்டில் பின்பற்றப் படும் விழுமியங்கள் பிள்ளைகள் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்து கின்றதென்பதில் பெற்றோர்களது கவனிப்புக்கள் தீவிரமாக இருத்தல் வேண்டும். குறைந்த கவனிப்புக்கள் உள்ள பிள்ளைகளது நெறிபிறழ்வுக்கு அவர்களது பெற்றோரே பொறுப்பு.

பாடசாலைக்கு எனவும் விழுமியங்கள் உள்ளன. பாடசாலையின் ஒழுங்கு விதிமுறைகளை மதித்தல், நேரம் தவறாமை, அமைதி பேணுதல், அதிபர், ஆசிரியர்களை மதித்தல், பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற விழுமியங்களை சிறு வயதுமுதலே கடைப்பிடிப்பின் மாணவப்பராயத்தில் மட்டுமன்றி தமது வாழ்விலும் பிரயோகிக்க முடியும்.

எனவே விழுமியங்கள் பின்பற்றப்படுவதன் மூலம் நேர்மனப்பாங்கு, உடல், உள ஆரோக்கி யம், சமூகமயப்படுத்தப்பட்ட நடத்தைகள், மனித நேயப்பண்புகள், தன்னம்பிக்கை, தொடர்பாடல் திறன், மற்றவர்களை மதிக்கும் பண்பு என்பவற்றைக் கொண்ட சமூகத்தால் ஏற்கக்கூடிய வாழ்வு வாழ முடியும். விழுமியங்களை வாழ்வில் நழுவ விட்ட பலரது வாழ்வு துன்பம் நிரம்பியதாக மாறியுள்ளது.

உன் வலியை நீ உணர்ந்தால் உயிரோடு இருக்கிறாய் என்று அர்த்தம். பிறர் வலியை நீ உணர்ந்தால் மனிதனாய் இருக்கிறாய் என்று அர்த்தம். நீ எதிர்பார்த்தது போல் வாழ்க்கை இல்லையா? கவலை வேண்டாம். நீ நினைத்தபடி மாற்ற முடியும். விழுமியங்களை கைப்பிடித்துச் சென்றால் மாத்திரமே.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

## எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி – 2023

## வெல்லுங்கள் 150,000 ரூபாய்கள்!

தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 150,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் _ 30,000.
இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் _ 25,000.
மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.
நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.
ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.
10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா _ 5000.

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புக்களுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31. 03. 2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: kurufanclub@gmail.com – (kurufanclub@gmail.com)

இணையம்: https://kurunovelstory.blogspot.com/
(kurunovelstory.blogspot.com)
https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிரிக்குழுக்களிலும் (whattsapp) பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

சுலோச்சனா அருண், செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

# ஒரு மனிதனாக இருப்பதன் அர்த்தம் என்ன?

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.timelesstoday.com**
**www.premrawat.com**

பிரம் ராவத் அவர்கள் இலங்கையில் தொலைக்காட்சிக்கு அளித்த நேர் காணலின் ஒரு பகுதி

ஒரு மனிதனாக இருப்பதன் அர்த்தம் என்ன என்று நமக்குத் தெரிவதில்லை. ஏனெனில் எங்களை ஓர் இயந்திர மனிதனாக நாங்கள் நினைக்கின்றோம்.

காலையில் எழுந்து இதைச் செய்ய வேண்டும். அதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம். எம்மால் எவ்வளவு சாதிக்க முடிந்தது என்பதை வைத்து, நம் நாளை எடை போடுகிறோம். நாங்கள் சாதிக்க வேண்டியதை வைத்து நம்மால் நாமே போட்ட பொறுப்புகளை எடை போடுகிறோம். நாம் செய்யவேண்டி இருக்கின்ற எங்கள் கடினமான பொறுப்பு களைப்பற்றி இரவில், அவற்றை கனவாக காண்கிறோம்.

அவன் அல்ல மனிதன். மனிதன் இருளை அல்ல, ஒளியைத் தன்னுள் சுமந்து கொண்டு இருக்கின்றான். மனிதன் தன்னுள் ஆனந்தத்தை சுமந்து கொண்டு இருக்கின்றான். தன்னுள் தெளிவை சுமந்து கொண்டு இருக்கின்றான். சந்தேகத்தை அல்ல. ஆனால், நாம் யார் என்று நமக்கு புரியாதபோது இதுதான் நடக்கின்றது.

ஆபிரிக்காவில் புகைப்படம் எடுப்பவர் ஒருவர் ஓர் ஆராய்ச்சி செய்தார். அவர் ஒரு பெரிய (Stainless steel) கண்ணாடியை காட்டில் வைத்தார். ஒரு கொரில்லா, தன்னை அக்கண்ணாடியில் பார்த்து விட்டு தன்னைத்தான் பார்க்கிறது என்று தெரியாமல் கண்ணாடியில் தெரிவது தனது எதிரி என நினைத்துக் கொண்டு கோபத்துடன் தனது நெஞ்சில் அடித்து முகத்தைக் கொடூரமாகக் கண்ணாடிக்குக் காட்டுகிறது. இங்கிருந்து ஓடிவிடு இது என்னுடைய இடம் எனக் கத்துகிறது. தன்னைத்தான் அதில் பார்க்கிறது என அதற்குப் புரிவதில்லை. சிம்பான்சி குரங்குகளும் அதைத்தான் செய்தன. ஆனால் சிறிது நேரத்தில் அவை கண்ணாடியில் பார்ப்பது தன்னைத்தான் என்று புரிந்து கொள்கின்றன.

இதுதான் விடயம். நீங்கள் யார் என்று உங்களுக்குத் தெரியாத பொழுது நீங்களே உங்களது எதிரியாகி விடுகிறீர் கள். அந்தக் கொரில்லா கண்ணாடியில் பார்த்த தன் விம்பத்தையே தனக்கு எதிரி யாக்கி விடுகிறது.

நாம் நமக்கே எதிரியாகி விடுகிறோம். நம்மால் ஒற்றுமையாக வாழ முடிவ தில்லை. மற்றவர்கள் யார் என்று நமக்குப் புரிவதில்லை. நீங்களும் என்னைப் போன்ற ஒருவர் தான். எனக்கு துக்கம், வேதனை தருவதுபோல், உங்களுக்கும் துக்கம், வேதனையைத் தருகிறது. ஆனால் மிக முக்கியமாக உங்களாலும் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். என்னாலும் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். அந்த ஆனந்தம் வெளியில் இருந்து வருவதில்லை. அந்த ஆனந்தம் நம் உள்ளே இருந்துதான் வருகின்றது. இவை ஆழமான புரிந்துணர்வுகள்.

நாம் மற்றவர்களை நம்பி இருக்க வேண்டியதில்லை. நாங்கள் எங்களை நம்பி இருக்கவேண்டும். அப்பொழுதுதான். சோக்ரடிஸ் (Socrates) "உன்னையே நீ அறிவாய்" என ஏன் சொன்னார் என்பது நமக்கு புரியும். நீங்கள்தான் அந்த பொக்கிஷம். நீங்கள் செல்வம் வேண்டும் என்று விரும்புகிறீர்கள், ஆனால் உங்கள் செல்வம் ஒரு குகையில் புதைந்து இருக்கிறதா அல்லது உங்களின் உள்ளே புதைந்து இருக்கின்றதா?

எவ்வாறு ஒருவர் தன் உள்ளத்திற்குத் தேவையான வழிகாட்டுதலைக் கண்டறிய இயலும்? ஏனென்றால், உலகெங்கும் உள்ள மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றனர். அடிப்படையில், மக்களால் தமக்கென்று ஒரு நேரத்தை ஒதுக்க முடியாமல் இருக்கின்றனர். இது தான் உண்மையும். கூட நமக்கு தேநீர் வேண்டும் என்றால் தண்ணீரை கொதிக்க வைக்கின்ற கேற்றிலில் உள்ள பொத்தானை அழுத்திக் கொள்கின்றோம்.

குளிக்க ஒரு குமிழியை திருப்புகிறோம். இவ்வாறுதான் மக்கள் அமைதியை பற்றியும் நினைக்கின்றார்கள். ஒரு விரைவான வழியை கொடுங்கள். ஒரு பொத்தானை அழுத்தினால் எனக்கு அமைதி கிடைக்க வேண்டும் என நினைக்கின்றனர். அமைதி கிடைப்பதற்கு பொத்தானை அழுத்தத் தேவையில்லை.

ஒருவர் தனக்குள்ளேயே அமைதியைத் தேடுவது எப்படி?

உங்களுக்கு கண்கள் இருக்கின்றன. எல்லோருடைய கண்களையும் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களால் உங்கள் கண்களை பார்க்க முடியாது என்று உங்களுக்குத் தெரியுமா? உங்கள் கண்களால் உங்கள் முகத்தை பார்க்க முடியாது.

நீங்கள் எல்லோருடைய முகங்களையும் பார்க்கிறீர்கள், உங்களுடைய முகத்தைத் தவிர. ஆனால் உங்கள் முன்னால் ஒரு கண்ணாடி இருக்கும் போதுதான் உங்கள் முகத்தை உங்களால் பார்க்க முடிகிறது. உங்கள் முகத்தை நீங்கள் பார்ப்பதற்கு உங்களுக்கு ஒரு கண்ணாடி தேவை. மற்றவர் முகத்தைப் பார்ப்பதற்கு கண்ணாடி தேவையில்லை. ஆகவே கேள்வி என்னவென்றால் ஏற்கனவே உங்களுக்கு உள்ளே இருக்கும் ஒன்றை எவ்வாறு நீங்கள் தேடப் போகிறீர்கள் என்பதுதான்? தேடல் அல்ல தேவை. தேவை எதுவென நாம் அறியத் தயாராக இருக்க வேண்டும்.


இதில். பெரிய வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் யார் என்பதை அறியத் தயாரா? அந்தக் கண்ணாடியில் நீங்கள் பார்க்கும் பொழுது அங்கு தெரிவதை பார்த்து ஆச்சரியப்படாதீர்கள், ஏனென்றால் அங்கு தெரிவது, நீங்கள்தான். இதேபோல நாங்கள் எந்த மனநிலையில் இருக்கி றோம் என்றால், ஒன்று, அமைதி நம்முள்ளே இல்லை என்று நினைக்கின் றோம். வெளியில்தான் இருக்கிறது என எண்ணி ஒவ்வாரு நாடுகளுக்குச் செல்கிறோம், புனித ஸ்தலங்களுக்குச் செல்கின்றோம், ஆலயங்களுக்குச் செல்கின்றோம். அமைதி எங்கே இருக்கிறது? அமைதி நம்முள்ளேதான் இருக்கிறது. அமைதி உங்களுக் குள்ளேயே இருக்கின்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள முடிகிறதா? அவ்வளவு சுலபமாக அதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.ல

உங்கள் குழந்தை மேல் நீங்கள் வைத்திருக்கும் உண்மையான அன்பை ஏன் அவர்களுக்கு சொல்வதில்லை. காலையில் அவர்களிடம் என்ன சொல கின்றோம்? நீ பாடசாலைக்கு செல்லத் தயாராக இரு. வீட்டுப்பாடத்தை செய்து முடித்து விட்டாயா? இவ்வாறுதான் பேச தொடங்குகின்றோம்.

உங்களுடைய குழந்தை தொலைந்து போனால் அல்லது எங்கே போனது என்று தெரியாவிட்டால், குழந்தைக்கு நீ தாமதமாக வருகிறாய் என்று சொல்வோமா அல்லது உனது வீட்டுப் பாடத்தை நீ செய்து விட்டாயா என்று கேட்போமா? இல்லை ஒரு விடயம்தான் நமக்கு முக்கியமானதாக இருக்கும். வீட்டுக்கு வா. உன் மேல் அன்பு வைத்திருக்கின்றேன்.

நான் உன்னைப் பார்க்க ஆவலாக இருக்கிறேன். ஏன் இதை முதலிலேயே கூறியிருக்கக் கூடாது?.

# குடும்ப உறவு



மக்கன்ரி என்றொருவர் ஆட்சி யிற்றான்
மனிதநேயம் வேண்டுமென்றே மக்கட் காக
தக்கதோர் விடுமுறையைத் தந்து சென்றார்
தாய்தந்தை பிள்ளைகள்சேர் குடும்ப மொன்றாய்
பக்குவமாய் நண்பர்களும் பாசப் பிணைப்பால்
பற்றுடனே ஒன்றுசேர்ந்தே பகுத்து உண்டே
விக்கினங்கள் ஏதுமின்றி விருந் தோம்பி
வீட்டிலே அன்பொளிர வைப்திந் நாளே.

வீட்டுக்கு நல்லவளை வைத்திட் டாலே
வீரமுடன் செயற்படுவான் வீட்டுத் தலைவன்
வாட்டமின்றி வாழ்வதற்கு வழியும் அதுவே
வாழ்க்கையெனும் ஓடந்தான் வழி தவறா
ஆட்டமின்றிச் சீராகச் செல்வதற்கும்
அருந்துணையாம் குடும்பமெனும் கோல்கள் தானே
கூட்டமாய்ச் சுற்றத்தார் சூழ்ந்தங் கேதான்
குடும்பநல் லுறவென்றே கூடி மகிழ்வர்.

கோவிபத்தொன் பதின்பின் குடும்ப உறவு
காரின் கடும்பொழி வென்போர் பலரே
தாவிவரும் கிருமிகளைத் தடுக்க வேண்டும்
தன்னைத்தான் காக்கவே வீட்டிற் றானே
பாவவினை என்றெண்ணிப் பாசம் காட்டி
பக்குவமாய்க் காத்திடுவோம் குடும்பந் தன்னை
சாவை விரும்பாதோர் சற்றே சிந்தித்தே
சேவைசெய் வைத்தியர்கள் சொற்படி நடப்போமே.

வீட்டில் இருப்பதனால் வினைகள் பற்பலவே
விதிவசத்தால் ஏற்பட்ட தொற்று நோயால்
வாட்டமுடன் தனிமையிலே வாழும் போது
வறுமையோடு மனவழுத்தம் வாட்டி வதைக்கும்
ஈட்டுகின்ற செல்வமெல்லாம் எங்கோ செல்லும்
இளையோரின் மனமகிழ்வை காண்ப தரிது
ஆட்டிபடைக்கும் அரனவனின் திருவிளை யாடலே
ஆள்கின்ற கொரோனாவை அழிப்போம் விரைவில்.
மனவுளைச்சல் காரணமாய் மகன்போய் விட்டான்
மகனிழந்த குடும்பமோ தத்தளிப்ப மெரிக்காவில்
வனப்பிழந்தே வாழ்கின்றார் மாண வர்கள்
வகுப்பறைக்குச் செல்லாத கார ணத்தால்
இன்னல் பலவாக ஏக்கத்துக் குள்ளாகி
என்னசெய்வ தென்றறியா ஏஞ்சல்க ளங்கே
பொன்னான உயிர்களெல்லாம் போகுதே
கொரோனாவால்
பேயாட்டம் ஆடுகின்ற கிருமிகளைக் கொல்வோம்.

முருகேசு மயில்வாகனன்

யாரிடம் வேண்டுமானாலும் இறங்கிப் போங்கள் ஆனால் உங்களை வேண்டாம் என்று ஒதுக்குபவர்களிடம் ஒரு துளியேனும் இறங்கிப் போகாதீர்கள்.

நாம் பேசாவிட்டால் அதற்காக யாரும் வருத்தப்படப் போவதில்லை. நம் இடத்திற்கு வேறு ஒருவரை தேர்ந்தெடுத்துக்கொள்ளப்போகிறார்கள் அவ்வளவுதான்.